Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2967)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 25 சனிக்கிழமை (10.08.2013) பக்கங்கள் 20 ஓசை – 314













# இரண்டுபட்டுள்ளது கூட்டமைப்பு இரு தலைமைச் செயலகங்கள் திறப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இரண்டுபட்ட நிலை காரணமாக கட்சிக்குள் உட்பூசல்கள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. மாகாண சபைத் தேர்தல் நெருங்கிவரும் சூழலில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தான்தோன்றித் தனமாக வழமையான கட்சி விதிகளையும் தாண்டிச் செயற்பட ஆரம்

19 ஆம் பக்கம் பார்க்க




# வடக்கில் கடற்றொழில் அபிவிருத்தி வியட்னாம் உதவியுடன் செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடல் வளத்தைப் பெருக்கி அதன்மூலம் கடற்றொழிலில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வியட்னாம் அரசு தொழில்நுட்ப உதவிகளை இலங்கை மக்களுக்கு வழங்க முன் வந்துள்ளதுடன் இதன் அபிவிருத்தி தொடர்பில் சாதகமான இடமாக வடமாகாணம் திகழ்கின்றது என இலங்கைக்கான வியட்னாம் தூதுவர் தொன் சிங் தான்ங் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த வியட்னாம் தூதுவர் நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடாத்தியிருந்தார். இச்சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது விடயமாக நான்கு தொழில்நுட்ப அதிகாரிகள் வியட்னாம் சென்று பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளனர். அவர்களினால் நாட்டில் உள்ள பல்வேறு பொருத்தமான இடங்கள் இனங்காணப்பட்டன.

19 ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் கருத்துக்களை அறிய நாடாளுமன்ற தெரிவுக்குழு முயற்சி

நாட்டில் நிலவும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொது மக்களின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தெரிவுக்குழுவின் விசேட அமர்வுகள் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது. இந்த அமர்வுகளுக்கு முன்னதாக இவ்விடயம் குறித்து பொதுமக்களிடமிருந்து ஆலோசனைகளையும்

19 ஆம் பக்கம் பார்க்க



## வாக்காளர் அட்டை விநியோகம்; அடுத்த மாதம் ஆரம்பம்

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்களுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்காக, தேர்தல்கள் திணைக்களம் இந்த மாதம் 27 ஆம் திகதி வாக்காளர் அட்டைகளை அஞ்சல் திணைக்களத்திடம் கையளிக்கவுள்ளது. தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி விசேடதினமாக அறிவித்து, வாககாளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பணிகளுக்கான இறுதித்தினமாக அடுத்த மாதம் 13 ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# பூம்புகார் கிராமத்துக்கு நேற்று முதல் மின்சாரம்

## மகிழ்ச்சியில் ஆரவாரித்தனர் மக்கள்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெருமுயற்சி காரணமாக அண்மையில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற அரியாலை கிழக்கு பூம்புகார் கிராமத்திற்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

“முழு நாடும் ஒளி பெறுகின்றது” என்ற மகிந்த சிந்தனையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வடக்கின் வசந்தம்

19 ஆம் பக்கம் பார்க்க

நாளை 5 ஆம் பக்கத்தில் சங்கரசிவன் கட்டுரை

## கண்ணி அகற்றும் ஊழியர் பாம்புக்கடியால் மரணம்

(சாவகச்சேரி)

தேன் எடுக்க காட்டிற்குச் சென்ற கண்ணிவெடி அகற்றும் ஊழியர் ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்காகி மரணமான சம்பவம் ஒன்று நேற்று அதிகாலையில் இடம்பெற்றது.

கொடிகாமம் பாலாவி வடக்கு வழவராஜன் காட்டுப் பகுதியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கனகசிங்கம் சர்வானந்தம் (வயது - 27) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# ஏமாற்று அரசியல்வாதிகளை இனங்கண்டு செயற்படவேண்டும்



மக்களை மூளைச்சலவை செய்து ஏமாற்றும் அரசியல் வாதிகளை இனங்கண்டு விழிப் புணர்வுடன் செயற்படவும் கடந்த காலங்களில் மக்களை பசப்பு வார்த்தைகள் மூலம் மேடைகளிலும் அரங்குகளிலும் வீரவசனங்கள் பேசி சுயலாப அரசியலை மேற்கொண்டு வந்த அரசியல் கட்சிகளினால் தமிழ் மக்களிற்காக நீலிக்கண்ணீர் வடிக்க முடிந்ததே தவிர மக்களிற்கு பயனுள்ள வகையில் எதனையும் செய்ய முடியவில்லை என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்தார்.

நேற்று வலி.கிழக்கு பிரதேச செல்வநாயகபுர கிராமத்திற்கு சுமார் ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக இலவச மின்சாரம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு மின் இணைப்பினை மக்களிற்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

மழை காலத்தில் புற்றிற்குள் இருந்து வெளியே வரும் ஈறும் புகள் போல் தேர்தல் காலங்களில் தற்போது பசப்பு வார்த்தை அரசியல்வாதிகள் படையெடுத்துள்ளனர். மக்களின் தேவைகள், அவர்களின் வாழ்வாதாரச்செயற்பாடுகள் யாரால் நிறைவேற்றப்படுகிறதோ அவர்களை இனங்கண்டு செயற்படுவதன் ஊடாக எமது கிராமங்களை மிளிரச்செய்ய முடியும்.

யுத்தத்தின் சத்தங்கள் இப்பொழுது எமது தேசத்தில் இருந்து முற்றாக தூக்கி வீசப்பட்டுள்ளது. அறிவுகளும் அகற்றப்பட்டு தெளிவான பாதையை நோக்கி நாங்கள் நகரத் தொடங்கி இருக்கின்றோம். கண்ணீர் காவியங்களாக இருந்த எமது மக்களின் வாழ்க்கை சுபீட்சகரமாக மறுமலர்ச்சி அடைந்து வருவதுடன் எமது பிரதேசங்கள் பலவிதமான அபிவிருத்தியைக்கண்டு வருகிறன.

இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுடைய சிந்தனைகளும் தெளிவான பாதைகள் நோக்கியும் சரியான தலைமையை நோக்கியதாகவும் இருக்கும் என நம்புவதுடன் சமுதாயத்திற்கு சரியான பாதையினைக் காட்டவும் தவற மாட்டீர்கள் என நம்புகிறேன் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வலி. கிழக்கு ஈ.பி.டி.பி .அமைப்பாளரும் வலி. கிழக்கு பிரதேசசபை எதிர்க் கட்சித்தலைவருமான ஐங்கரன், யாழ்.மாவட்ட மின் பொறியியலாளர் ஞானகணேசன், ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## புனரமைப்பு

(வேலணை)

வேலணை பிரதேச சபைக் குட்பட்ட சில வீதிகள் சிறு கற்கள் இட்டு செப்பனிடப்பட்டு வருகின்றன.

நீண்ட நாட்களாக சிறுசிறு குழிகளாக இருந்த இவ்வீதிகளே இவ்வாறு செப்பனிடப்படுகிறது.

குறிப்பாக வேலணை வங்களாவடிச் சந்தி வீதியும், அதனை அண்டிய பல வீதிகளும் தற்போது பெய்துவரும் மழையினால் பலத்த சேதமடைந்த நிலையில் புனரமைக்கப்படுகின்றன. (21)

## வருடாந்த உற்சவம்

(ஆனைக்கோட்டை)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் மகோற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு இரதோற்சவமும், 20 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் மறுநாள் பூங்காவனமும் இடம்பெறும்.(104)

* * * * *

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை வரத விக்கின விநாயகர் சும்மந்தப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இம்மகோற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (104)

* * * * *

(வேலணை)

வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் 8 ஆம் திருவிழா அன்று தீ மிதித்தலும் 9 ஆம் திருவிழாவான ஞாயிற்றுக் கிழமை மாலை அம்பாள் வீதியுலா வரும் காட்சியும், இரவு காலை 10 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 19 ஆம் திகதி திங்கட்கிழமை 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், மறுநாள் புதன்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. உற்சவ காலத்தில் ஒவ்வொரு நாளும் மகேஸ்வர்பூசை இடம்பெறும். (85,21)

* * * * *

(காரைநகர்)

காரைநகர் வலந்தலை இலகடி அத்திரபுர கந்தசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். இறுதிநாள் 22 ஆம் திகதி வியாழக்கிழமை முருகப்பெருமானுக்கு திருக் கல்யாண திருவிழாவுடன் நிறைவுபெறும். (50)

## தற்கொலைக்கு முயன்ற இருவர் ஆபத்தான நிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டிருப்பதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 30 வயது ஆண் ஒருவர் பூச்சிநாசினி மருந்தை உட்கொண்டு ஆபத்தான நிலையில் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இளம் பெண் ஒருவர் பெருமளவான மருந்துக்குளிசைகளை உட்கொண்டு ஆபத்தான நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## குடாநாட்டில் திடீர் மழை; வெங்காய அறுவடை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

ஓரிருதினங்களாக யாழ்ப் பாணப்பகுதிகளில் மழை பெய்யத்தொடங்கியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இம்முறை சின்னவெங்காயத்திற்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளமை எல்லோரும் அறிந்ததே. அந்தவகையில் கூடுதலான விவசாயிகள் அதிகளவிலான முதலீட்டைக்கொண்டு வெங்காயச் செய்கையை மேற்கெண்டு அறுவடை செய்து தோட்டவெளிகளில் வெய்யிலில் பதப்படுத்தி வந்த நிலையில், இரவுவேளையில் திடீரென மழை பெய்ததால் மழையில் சிறிய வெங்காயம் நனைந்து விட்டதாகவும், இதனால் அவற்றை மீள்நடுகைக்கு சேமித்து வைக்க முடியாது என்றும் உடனடியாக இவற்றை விற்பனை செய்யா விட்டால் பழுதடைந்துவிடும் என்றும் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அளவெட்டிப் பகுதியிலேயே அதிகளவில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (இ)

## தவறிவிட்டது

ஜேர்மனியில் வாழ்ந்துவரும் காலநாதன் பாலகணன் என்பவர் தனது ஜேர்மன் தேசிய அடையாளஅட்டையை 08.08.2013 வியாழக்கிழமை பருத்தித்துறை பேருந்தில் தவறவிட்டுள்ளார். அதனைக்கண்டு எடுப்பவர்கள், 279, நாவலர் வீதி, ஆனைப்பந்தி என்ற முகவரியில் ஒப்படைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அறிவித்தல் கொடுப்பவர் க.பாலகணன் தொலைபேசி இல:0775826228. (C/2981)



நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பருத்தித் துறை வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் தண்ணீர்ப் பந்தலைக் காணலாம். (137)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 980 | திகதி 08.08.2013

வெற்றி எண்கள் | ஆங்கில எழுத்து

06 26 35 55 Y

ஜக்பொட் பரிசு ரூ. 1,32,52,700/= வெற்றி பெற்றுள்ளார்

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,35,52,700/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | ரூ. 7,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 264 | 1,000/= | ரூ. 2,64,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 503 | 1,000/= | ரூ. 5,03,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11842 | 60/= | ரூ. 7,10,520/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6384 | 40/= | ரூ. 2,55,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 156469 | 20/= | ரூ. 31,29,380/= |
| ஆங்கில எழுத்து | 22481 | 20/= | ரூ. 4,49,620/= |
| | | மொத்தம் ரூ. | 70,61,880/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| வவுனியா | 704656194-8-18 |
| ஹம்பாந்தொட்டை | 704646619-1-11 |
| நுவரெலியா | 704647204-7-07 |
| இரத்தினபுரி | 704643207-9-49 |
| பொலன்னறுவை | 704653007-7-17 |
| அம்பாறை | 704648688-7-47 |
| யாழ்ப்பாணம் | 704642836-2-02 |
| பதுளை | 704648547-8-48 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 74,61,880/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 13,859,080/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.0812 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356 கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7

(C/2980)

# நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லாததால் அவதி

## சிகிச்சை பெறமுடியாது மக்கள் அவலம்

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் உள்ள ஒரே ஒரு வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாமையினாலும் தாதியர்கள் இல்லாமையினாலும் இப்பிரதேச பொதுமக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருவதாக மாந்தை கிழக்கு பிரதேசசபையின் உபதலைவர் சி.செந்தூரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர்,

மீள்குடியேற்றத்தின் பின் பல்வேறுபட்ட தரப்பினரின் வேண்டுதலுக்கு அமைவாக கடந்த ஏழு மாதங்களாக தற்காலிக அடிப்படையில் இவ் வைத்தியசாலைக்கு வைத்தியர் நியமிக்கப்பட்டு வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்து முழுநேர வைத்திய சேவையினை இப்பகுதி மக்களுக்கு அவர் வழங்கியிருந்தார்.

எனினும் தற்போது இவ் வைத்தியசாலை வைத்தியர் மாற்றம் செய்யப்பட்ட நிலையில் சீரான சேவையினைப் பெற முடியாது பொதுமக்கள் சிரமங்களுக்கு முகம்கொடுப்பது தொடர்பில் நாளாந்தம் முறைப்பாடு கிடைத்த வண்ணம் உள்ளது.

இது தொடர்பாக மாவட்ட வைத்திய அதிகாரியிடமும், அரசாங்க அதிபரிடமும் எமது பிரதேசம் என்ற ரீதியில் சீரான வைத்திய சேவை கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு கோரப்பட்ட கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் அண்மையில் திடீர் சுகவீனம் அடைந்த சிறுமியினை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது வைத்தியர் இல்லாத நிலமையினை சிறுமியினுடைய பெற்றோர்களினால் எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தின் அடிப்படைத் தேவைகள் தொடர்ச்சியாக நிவர்த்தி செய்யப்படாத நிலையும் மாந்தை கிழக்கு பிரசேத்தினை புறக்கணிக்கும் நிலையும் தொடர்ந்து காணப்படுவதாகவும் வீதிப்புனரமைப்பு, மின்சார விநியோகம், உத்தியோகத்தர்கள் தங்குவதற்கான விடுதிகள் இல்லாமை, சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாமை போன்ற பல்வேறு இடையூறுகளை மாந்தை கிழக்குப் பொதுமக்கள் சந்தித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (160)

# மிகமோசமாக சேதமடைந்துள்ள வேம்படி வீதியின் ஒரு பகுதி

(குருநகர்)

யாழ். புல்லுக்குளத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள வேம்படி வீதியின் ஒரு பகுதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது.

மற்றும் முனியப்பர் வீதியில் வெளிமாவட்டங்களுக்கு செல்லும் தனியார் பேருந்து தரிப்பு நிலையம் முன்பாகவும் வீதி செப்பனிடப்படாமல் அரைகுறையாக விடப்பட்டுள்ளது.

அஞ்சல் வளாகம் முன்பாக பண்ணை நோக்கிச் செல்லும் வீதி, சிவன்பண்ணை வீதி என்பனவும் போக்குவரத்துக்கு உதவாதவாறு குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

மேற்படி வீதிகளால் பாடசாலை மாணவர், அரச கரும ஊழியர் அரச திணைக்களங்களான தொலைத்தொடர்பு நிலையம், தொழில் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி உதவியாணையாளர் அலுவலகம் ஆகியவற்றுக்கு செல்வோர பாதிப்புக்கு உள்ளாவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (68)

# நீதிமன்றச் செய்திகள்



*இந்தியா கோயம்புத்தூர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சட்டவிரோதமான முறையில் விசா இன்றி தங்கியிருந்ததாக குற்றஞ்சாட்டி முல்லைத்தீவு பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர்படுத்தபட்ட வேளையில் அவ்விளைஞரை இரண்டு வார சமூக சேவையில் நீதிமன்றிலும், வற்றாப்பளை அம்மன் ஆலயப்பகுதியிலும் ஈடுபடுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தண்டப்பணம் விதிக்கப்பட்ட போதிலும் அதனை நிறைவேற்ற தமக்கு போதிய பணம் இல்லை எனத் தெரிவித்ததை தொடர்ந்தே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.


*முல்லைத்தீவு தேறாங்கண்டல் பிரதேசத்தில் கடந்த 16 ஆம் திகதி வீடு ஒன்றை உடைத்து உட்புகுந்து 140,000 ஆயிரம் பெறு மதியான தங்க நகைகளை களவாடிச் சென்று வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இருவருக்கு தனித்தனியாக மூன்று குற்றச்சாட்டுகளுக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனைப்படி 6 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (170)

*முல்லைத்தீவு பகுதியில் பராமரிப்பு வழக்கு ஒன்றில் பல காலமாக ஒளித்து திரிந்த நபர் ஒருவர் முல்லைத்தீவு நீதிமன்றின் பகிரங்க பிடியாணையால் பிடிக்கப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தபட்டார்.

இந்நபர் முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் பல பெண்களை திருமணம் புரிவதாக ஏமாற்றி கைவிட்டு சென்றதாகவும், பராமரிப்பும் பணம் செலுத்த மறுத்து வருவதாகவும் பொலிஸாரும், சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தரணிகளும் மன்றுக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து அந்நபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.


*முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதியில் 16 வயது நிரம்பிய சிறுமியை கர்ப்பிணியாக்கிய நபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (170)

# சொற்பொழிவு



தொண்டைமனாறு ஸ்ரீ செல்வச சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் முற்பகல் 10 மணிக்கு விஷேட சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி இன்று சனிக்கிழமை ஆன்மிகம் காட்டும் அறிவியல் என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் எஸ்.பரமேஸ்வரன் சொற்பொழிவாற்றவுள்ளார். (01)



பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் சிவன் ஆலய வருடாந்த தேர் உற்சவம் நேற்று முன்தினம் காலை நடைபெற்றபோது

# அடிக்கடி தடைப்படும் மின்சாரம் உயர்தர மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் அடிக்கடி தடைப்படும் சீரற்ற மின் விநியோகத்தால் உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

மின்ஒளியில் கல்வி கற்ற மாணவர்கள் சாதாரண விளக்குகளில் கல்வி கற்பது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும் மாணவர்கள் அதிக நேரம் கல்வி கற்று வருவதால் மின்விநியோகம் அவசியம் தேவையாகவுள்ளது எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்

இதனால் தமது பிள்ளைகள் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற முடியாமல் போகும் எனவும் இதுதொடர்பில் உரியவர்கள் பரீட்சை முடிவடையும்வரை மின்சாரத்தை சீராக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர். (180)

# "எம் தாயே முத்துமாரி" இறுவட்டு வெளியீடு

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வெளியீட்டுக் குழுவின் வெளியீடான கவிப்புலவர வேலணையூர் சுரேஷின் பாடலாக்கத்தில் முரளியின் இசையில் உருவான "எம் தாயே முத்துமாரி"" இசைப் பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய மணி மண்டபத்தில நடைபெறவுள்ளது.

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் மீது பாடப்பெற்ற இப்பாடல்களை தென்னிந்திய பாடகர்களான மனோ, மாலதி, ரி.எல். மகாராஜன், கிருஸ்ணராஜ் மற்றும் நம் நாட்டுப் பாடகர்களான எஸ்.ஜ.சாந்தன், சுகுமார், சந்திரமோகன், வேலணை சிவதர்ஷிகா, ரி.மேரி ஆகியோர் பாடியுள்ளனர்.

இவ் வெளியீட்டு நிகழ்வுக்கு பிரபல தொழிலதிபர் எஸ்.பி.சாமி, நல்லை ஆதீன குருமுதல்வர், வலம்புரி பிரதம ஆசிரியர் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

அம்பிகை அடியார்கள் கலை ரசிகர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில் சுவரொட்டிப் போட்டி

தொழில் உறவுகள் அமைச்சும் தொழில் திணைக்களமும், சர்வதேச தொழில் நிறுவனத்தின் இலங்கைக் கிளையும் இணைந்து தொழில்சார் விபத்துக்களையும் தொழிலாளரது நோய்களை யும் குறைக்கும் நோக்கத்துடன் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவூட்டும் வகையில் வேறுபட்ட நான்கு பிரிவுகளில் சுவரொட்டிப் போட்டிகளையும் சுவரொட்டிக் கண்காட்சியையும் நடாத்தவுள்ளது.

இதன்படி அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் இந்தப் போட்டியில தரம் 10-13 வரையான பாடசாலை மாணவர்களுக்கும், தொழில் பயிலுநர,தொழிற்சாலை ஊழியர், கட்டட நிரமாணத்தள ஊழியர என 4 பிரிவுகளில் நடாத்தப்படவுள்ளது.

சுவரொட்டிப் போட்டிகளுக்கான விதிகளும் வழிகாட்டல்களுமாக சுவரொட்டி 23x18 வெள்ளை பிரிஸ்டல் அட்டையில் அமைய வேண்டும், போட்டியாளரே தாம் விரும்பியவாறு வர்ணங்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும், சுவரொட்டிகள் தொழில்சார் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் பற்றியவையாக இருத்தல் வேண்டும். அத்துடன் அவை தரப்பட்ட கருப்பொருளுக்கு அமைவாக இருக்க வேண்டும், சுவரொட்டியானது போட்டியாளரது சொந்தப்படைப்பு என்பது, போட்டியாளர் சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் இலச்சினை முத்திரையுடன் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டியாளர் சுவரொட்டியின் பின்புறத்தில் தமது பெயர், முகவரி, பாடசாலை (தரம்) தொழிற்பயிற்சி நிறுவனத்தின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டுத் தமது ஒப்பத்தையும் இடவேண்டும்.

வெவ்வேறு பிரிவுகளுக்கான கருப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கு நாம் விபத்துக்களைத் தவிர்த்து எம்மை காக்கவும் எமது அறிவை வளர்க்கவும் செய்வோம், தொழில்பயிலுநர்களுக்கு பாதுகாப்பான தொழில் தளம் நாளை தோன்றட்டும், தொழிற்சாலை ஊழியர்களுக்கு உங்கள் நோக்கில் பாதுகாப்பான தொழிற்சாலை, கட்டட நிர்மாணத்துறை ஊழியர்களுக்கு பாதுகாப்பான வேலைத் தளங்கள் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் போன்றனவாகும்.

தகுதியுடைய நடுவர் குழுவொன்று சுவரொட்டியைத் தெரிவு செய்யும். சுவரொட்டிக்கான பரிசுகளாக ஒவ்வொரு பிரிவிலும 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களை பெறுவோருக்கு பெறுமதியான பணப்பரிசுகள் வழங்கப்படும், பங்கேற்கும் சகல போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும், மேற்குறித்த வழிகாடடுதலுக்கு அமைந்த சுவரொட்டிகள் யாவும் பின்வரும் முகவரிக்கு 2013 செப்ரெம்பர் 8 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "சுவரொட்டிப் போட்டி-2013" என்று குறிப்பிட்டு தொழில ஆணையாளர் (கைத்தொழில் பாதுகாப்பு) கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு, தொழிற் திணைக்களம், 97, ஜாவத்தை வீதி கொழும்பு 05 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0112508783, 0112508772 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

பரிசில்களும், சான்றிதழ்களும் எதிர்வரும் ஒக்ரோபர் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு 7 இல் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பவுண்டேஷன் நிறுவனத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் அமைச்சர் காமினி லொக்குகே தலைமையில் நடைபெறவுள்ளது.

(54)

நீ எப்போது யாருமற்ற ஏழை, எளியவர்களுக்கு உதவுகிறாயோ, அப்போது ஆண்டவன் உன்னிடம் 'கடன்காரன்' ஆகிறான். - வான்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## எதிர்ப்பதற்குத் தேடும் நியாயம்!

ஆட்டுக் குட்டியைப் பிடித்துச் சாப்பிடுவதற்கு ஓநாய் நியாயம் கண்டுபிடித்துச் சொல்லிய கதையை நாமறிவோம். ஆற்றங் கரையில் நீரருந்திக் கொண்டிருந்த ஓநாய் சற்றுத் தள்ளி அதே ஆற்றில் ஆட்டுக்குட்டி ஒன்றும் நீரருந்திக் கொண்டிருப்பதைப் பார்த்துவிடும். அதைப் பிடித்துச் சாப்பிடுவதற்கான நியாயத்தை உருவாக்கிக் கொள்வதற்காக மெல்லப் பேச்சை ஆரம்பிக்கும்.

"ஏய் குட்டியே, நீ தண்ணீரைக் கலக்குவதால் எனக்குக் கலங்கிய நீர்தான் வருகிறது. நான் எப்படி இதைக் குடிப்பது?" என்று கோபத்துடன் கேட்டது.

ஓநாயைத் திரும்பிப் பார்த்த ஆட்டுக்குட்டி மிக பவ்வியமாக பதில் சொன்னது: "நீங்கள் ஆற்றின் மேலே நின்று குடித்துக் கொண்டிருக்கிறீர்கள். நான் கீழே அல்லவா நின்று குடிக்கிறேன். நீங்கள் குடித்த பிறகுதானே எனக்குத் தண்ணீர் வருகிறது. நான் எப்படி உங்கள் தண்ணீரைக் கலக்கியிருக்க முடியும்?"

ஓநாய் சிறிது யோசித்தது. "ஏய் எதிர்த்துப் பேசாதே. நீ கலக்காவிட்டால் என்ன, உன் அப்பா கலக்கியிருப்பான். உன்னை என்ன செய்கிறேன் பார்" என்றது.

"என் அப்பாதான் இறந்துவிட்டாரே... அவர் எப்படி கலக்கியிருக்க முடியும்?" என்றது அப்பாவியாக ஆட்டுக்குட்டி.

"உன் அப்பா கலக்காவிட்டால் என்ன, உன் பாட்டன் கலக்கியிருப்பான் முப்பாட்டன் கலக்கியிருப்பான்" என்று சொல்லிக் கொண்டே ஆட்டுக்குட்டியைப் பாய்ந்து கவ்வியதாம் ஓநாய்.

எதிர்ப்பையும் பகையையுமே தங்கள் சுயலாப அரசியலுக்கான மூலதனமாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் மக்களுக்குச் சொல்லும் நியாயங்களும் இந்த வகையினதாகவே அமைந்திருக்கின்றன. அரசோடு இணக்கமாகப் பேசிச் சாதித்ததன் மூலம் படையினர் கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் காணிகளைத் திருப்பித் தருகிறார்கள் என்றால், அது நவநீதம்பிள்ளை வருவதால் அவருக்குக் காட்டுவதற்காக அல்லவோ கொடுக்கிறார்கள் என்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புத்திசாலிப் பேச்சாளர்.

அரசாங்கத்திலுள்ள மூத்த அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டிருப்பதால், படிப்படியாக இன்னும் பெரும்பாலான காணிகளை இதுபோன்றே மக்களிடம் திருப்பிக் கொடுத்துவிடப் போகிறோம் என்று படைத்தளபதி பகிரங்கமாகவே அறிவித்தால், "மக்களே மகிழ்ந்துவிடாதீர்கள்... இது தேர்தலுக்காகக் கொடுக்கிறார்கள்" என்று அலறியடிக்கிறார் அந்தக் கூட்டமைப்புப் பேச்சாளர். தேர்தல் நேரத்திலேனும் காணிகள் திரும்பக் கிடைத்துவிடுவதற்கு மக்கள் மகிழ்ந்துவிடக் கூடாதாம்! மக்கள் துன்பத்தில் அரசியல் செய்வோரின் பேச்சு அப்படி இருக்கிறது!

கடந்த முப்பது வருடங்களாக கிடங்குகளும் மண்ணுமாகிவிட்ட வீதிகளை காப்பெற் வீதிகளாக மாற்றி மக்கள் போக்குவரத்தை இலகுபடுத்தினால், முகத்தைத் தோளில் இடித்துவிட்டு, வெளிநாடுகளுக்குக் காட்டவெல்லோ இதெல்லாம் செய்கிறார்கள் என்று நொட்டை சொல்லிப் பொருமியபடி போய்க்கொண்டிருக்கிறார்கள். அப்படியே குண்டும் குழியுமாக இருந்தாலல்லவோ தங்கள் அரசியலுக்கு நல்லது என்பது அவர்களது உள்ளக்கிடக்கை.

வீடுகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், அலுவலகங்கள், சந்தைக் கட்டடங்கள் என்று படிப்படியாக வடக்கு மக்களுக்கும் கிடைத்துவருவதைப் பார்த்துவிட்டு, "அதெல்லாம் வெளிநாட்டுக்காரன் கொட்டிக்கொடுக்கிற பணத்தில் இவர்கள் கொஞ்சமாகச் செய்கிறார்கள்" என்று ஆகடியம் மட்டும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களுக்கு இவையெல்லாம் கிடைக்க வேண்டும் என்ற விருப்பமும் அக்கறையும் இவர்களுக்கு இருந்தால், கொஞ்சமாகக் கிடைத்ததைப் பாராட்டி, கூடக் கிடைப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும்; கோரிக்கை வைக்க வேண்டும்; செயற்பட வேண்டுமல்லவா? இவர்களது புறணிகளோ எதையும் செய்யவிடாமல், மக்களுக்கு எதுவும் கிடைக்க விடாமல் தடுத்துக்கொண்டிருப்பதில் அல்லவா குறியாக உள்ளன.

- ஆசிரியர்

### பயணிகளின் வருகையை அதிகரிக்க

# மத்தள விமானநிலைய சேவையை விஸ்தரிக்க அரசு நடவடிக்கை

மத்தள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு விமான சேவையை விஸ்தரித்து பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

அம்பாந்தோட்டை - மத்தள பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்குச் செல்லும் விமானங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு விமானங்கள் மற்றும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் அரசாங்கம் மத்தள விமான நிலையத்தின் ஊடாக இலங்கை செல்லும் விமானக் கட்டணங்களை குறைத்துள்ளது.

இதேவேளை எமிரேட்ஸ், கல்.்.ப் எயார் போன்ற வெளிநாட்டு விமான சேவை நிறுவனங்களின் விமானங்களை மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கவும் அங்கு நிறுத்திவைப்பதற்கான கட்டணங்களையும் அரசாங்கம் 50 சதவீதமாகக் குறைத்துள்ளது.

இதனைத் தவிர, விமானங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரண காலமும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத் தொடக்கத்தில் வெளிநாட்டு விமானங்களிடம் அறவிடப்பட்ட கட்டணங்களில் 50 வீதம் சலுகையளிக்கப்பட்டது. இதற்கிணங்க, இந்தக் கட்டண சலுகையை தொடர்ந்தும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்தள மகிந்த ராஜபகஷ சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் விமானங்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அந்த விமான நிலையத்தை, விமானங்களை பழுதுபார்க்கும் நிலையமாக மாற்ற அரசாங்கம் உத்தேசித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் எரிகல் பொழிவு இன்று தொடக்கம் காணலாம்

இன்று தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வரையான 3 நாட்களுக்கு இலங்கையில் இடம் பெறவுள்ள எரிகல் பொழிவை தெளிவாக காணும் வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கவுள்ளது.

நாளைய தினம் மணித்தியாலத்திற்கு 15 எரிகற்களை காண முடியும் எனவும், அடுத்து வரும் நாட்களில் அது 50 ஆக அதிகரிக்கக் கூடும் எனவும் இலங்கை கோள் மண்டலம் தெரிவித்துள்ளது.

பிரகாசத்துடன் பொழியும் எரிகற்களை கண்களால் தெளிவாகக் காண முடியும் என கோள் மண்டலம் குறிப்பிட்டுள்ளது.

மேகமூட்டமற்ற காலநிலை காணப்படுமாயின், நள்ளிரவு தொடக்கம் அதிகாலை வரை வானத்தின் ஈசான திசை பகுதியில் எரிகல் பொழிவை காண முடியும் எனத் தெரிவிக்கபபட்டுள்ளது.

# நான்காவது புகலிடதாரி குழுவும் பப்புவா நியூக்கினியாவிற்கு

புதிய பிராந்திய குடியேற்ற ஏற்பாட்டுக்கமைய புகலிடக் கோரிக்கையாளர்கள் 39 பேர் அடங்கிய நான்காவது குழுவினரும் பப்புவா நியூகினியா தீவில் குடியமர்த்தப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகராலயம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பப்புவா நியூகினியர்வுடன் யூலை 19 ஆம் திகதி செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டவிரோதமாக வந்தவர்கள் விசாரணைக்காக பப்புவா நியூக்கினியாவுக்கு அனுப்பப்படுவர். இவர்கள் அகதி எனக் காணப்படின் அங்கேயே குடியமர்த்தப்படுவர். அகதியாக இனங்காணப்படாதவர்கள் அவரவர் சொந்த நாட்டுக்கு அனுப்பப்படுவர். அல்லது தற்காலிகமாக முகாம்களில் தங்க வைக்கப்படுவர் என அவுஸ்ரேலிய குடிவரவுத் திணைககளத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஈரான், பாகிஸ்தான் நாட்டவர்களும் நாடற்றவர்கள் என கூறியவர்களும் கிறிஸ்மஸ் தீவிலிருந்து 1.20 மணிக்கு தனி விமானம் மூலம் பப்புவா நியூக்கினியிலுள்ள மானுஸ் மாகாணததிற்குகொண்டு நேற்று முன் தினம் செல்லப்பட்டுள்ளனர். இவர்களதுபுகலிடக் கோரிக்கையை பப்புவா நியூக்கினியா அரசாங்கம் பரிசீலிக்கும்.

ஆட்கடத்தல் காரர்களுக்கு மக்கள் ஆயிரக்கணக்கான டொலர்களை கொடுத்து அவுஸ்ரேலியா தவிர வேறு ஒரு நாட்டுக்குத்தான் பயணச் சீட்டு வாங்கிக்கொண்டுள்ளனர் என்று பேச்சாளர் தெரிவித்தார்.

# வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் சுயதொழில் உதவிக்கு பயனாளிகள் தெரிவு

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் புலோலி தெற்கு, வல்லிபுரக்குறிச்சி ஆகிய கிராமங்களில் இருந்து பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி வழங்கும் வகையில் 9 பேரைத் தெரிவு செய்துள்ளது.

இவர்களில் மீள்குடியமர்ந்தவர்களும் போரினால் பாதிக்கப்பட்டவர்களும், கணவனால் கைவிடப்பட்டவர்களும், விதவைகளுமஅடங்குவர்.

இவர்களுக்கான வாழ்வாதார உதவியாக வீட்டிலிருந்து பனங்கட்டி உற்பத்தி செய்வதற்கு முன்னாள் போரூட் திட்டப்பணிப்பாளர் ஜனாப் எம்.மாரக்கார் முன்வைத்துள்ளார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இதில் ரூபா 10 ஆயிரம் இனாமாகவும் ரூபா 10 ஆயிரம் கடனாகவும் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

பயனாளிகள் பனங்கட்டியை தாமே உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி கிடைக்கும் வருமானம் மூலம் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களது வீடுகளுக்கு வடமராட்சி நல்லொழுக்க நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர்கள் நேரில் சென்று பார்வையிட்டு பனங்கட்டியின் தரத்தைப் பேணுவதிலும் கவனம் செலுத்திவருகின்றனர். விரைவில் இவர்கள் செய்யும் பனங்கட்டியை தென்பகுதிக்கு அனுப்புவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். (109)

# இடைவிலகிய மாணவர்கள் பாடசாலைகளில் இணைப்பு

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய 11 மாணவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர்வதற்காகப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டனர்.

பாடசாலைகளில் வரவு ஒழுங்கீனமான நிலையில் உள்ள மாணவர்களின் விபரங்களைப் பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், கட்டாயக் கல்விக் குழுப் பொறுப்பாசிரியர், பாடசாலை ஆசிரியர் அடங்கிய குழுவினருடன் இந்த மாணவர்களின் பெற்றோருடன் மேற்கொண்ட கலந்துரையாடல், ஆலோசனைகளினைத் தொடர்ந்து மாணவர்கள் பாடசாலைகளில் இணைந்து கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

# மாதாந்தக் கொடுப்பனவு

கரவெட்டி பிரதேசத்தில் 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு சகல தபாலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தற்போது இக் கொடுப்பனவுகளுக்கு உரியவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம் என கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார். (18)

# செம்மை (Perfection) பற்றி....

■ வ. ஸ்ரீநிவாசன்

**'சொர்க்கம்** ஓர் இடமல்ல அது ஒரு காலமுமல்ல. சொர்க்கம் என்பது செம்மையாய் (முழுமையாய்) இருத்தல். அது ஒரு மணி நேரத்தில் ஆயிரம் மைல்கள் அல்லது மில்லியன் மைல்கள் பறப்பதல்ல. அல்லது ஒளியின் வேகத்தில் பறப்பது மல்ல. ஏனெனில் எண்ணிக்கை என்பதில் ஓர் எல்லை உள்ளது. செம்மைக்கு எல்லை இல்லை. செம்மையான வேகம் என்பது, மகனே, இருக்க வேண்டிய இடத்தில் சரியாக இருப்பது."


- Richard Bach, Jonathan Livingston Seagull

ஒரு விடயத்தில் செம்மை என்பது அவ்விஷயத்தின் ஒவ்வொன்றும் அதனதன் சரியான இடத்தில் இருப்பது. சரியான இடம் என்பது என்ன? இது ஒரு சப்ஜெக்டிவ்வான விஷயமாக இருக்கையில் செம்மை ஆளாளுக்கு, ஒவ்வொரு காலத்துக்கு, ஒவ்வொரு இடத்துக்கு மாறுபடும்.

செம்மை, ஒரு கைக்குட்டையை மடிப்பதில் இருக்கிறது. எப்படி சாப்பிட வேண்டும் என்பதில் இருக்கிறது. பரிமாறும் உணவுப் பொருட்களின் வரிசையில், வணங்குவதில், வேட்டி கட்டுவதில், வெற்றிலை போடுவதில், கை கழுவுவதில், தலை வாரிக் கொள்வதில், உழுவதில், நாற்று நடுவதில், முடிதிருத்துவதில், துணி துவைப்பதில், தேநீர் போடுவதில், குடிப்பதில் இலக்கணம் இருக்கிறது. சொல்லித்தெரிய வேண்டா கலைக்குக் கூட வாத்ஸ்யாயனரின் சூத்திரங்கள் இருக்கின்றன. Etiquettes and manners பற்றி எத்தனையோ புத்தகங்கள் மேலை நாடுகளில் உள்ளன. மேடை நாகரிகம் முதல் மேசை நாகரிகம் வரை சொல்லிக் கொடுக்க நூல்கள் இருக்கின்றன. இவற்றின் அடிப்படை, நம்பிக்கைகளாக இருக்கலாம். விஞ்ஞான காரணங்கள் கூட இருக்கலாம். ஒரு மொழியை எழுதுவதில், பேசுவதில் சரியான வழி இதுதான் என்று உள்ளது. இவை எல்லாமே மரபு, இலக்கணம் சார்ந்தவை. இடத்திற்கு இடம் கலாசாரத்துக்குக் கலாசாரம், குழுவிற்குக் குழு இது மாறுபடும்.

ஒரு விஷயம் ஒருவருக்கு செம்மை என்று தெரியலாம். இன்னொருவருக்கு அது பற்றி அத்தகைய அபிப்பிராயம் இராமல் போகலாம். ஒரு நடிகர் தோன்றும் காட்சிகளில் மெய் மறக்கும் இரசிகர் அதுவே, அவர் நடிப்பே, அவர் போடும் சண்டையே செம்மை என்று உளமார நம்பலாம். ஓர் அரசியல் தலைவரின் பேச்சில், ஒரு நடிகையின் நடனத்தில், ஓர் இயக்குனரின் படத்தில் என்று அவரவர்கள் இரசிகர்கள் மனதைப் பறிகொடுக்கலாம். அவர் அனுபவிப்பவையே செம்மையானது என்று சொல்லலாம். இவை முழுக்க முழுக்க முன் முடிவுகளால், பாரபட்சத்தால், விருப்பு வெறுப்புகளால் ஒருவர் பற்றிய பிரமையால் நிகழ்வதாக இருக்கக் கூடும். இது மனித மனதின் விசித்திரங்களில் ஒன்று.

இம்மாதிரி மரபு சார்ந்த, முன் முடிவு சார்ந்த, சார்பு சார்ந்த செம்மை தவிர சரியான இடத்தில், சரியான காலத்தில் அமைந்த ஒரு விஷயமும் செம்மையானதாக ஆகிறது. சுவரின் சரி மத்தியில் அடிக்கப்பட்ட ஆணியிலிருந்து, சாயாமல் தொங்கும் கலண்டரிலிருந்து, மிகச்சரியாக விரிக்கப்பட்ட மேசை விரிப்பு, ஒழுங்காக அடுக்கப்பட்ட புத்தகங்கள், சரியாக துடைக்கப்பட்ட வாகனம், பொலிஷ் செய்யப்பட்ட சப்பாத்து, நேரத்துக்கு வரும் ரயில் வண்டி வரை இடம் மற்றும் காலத்தால் நிர்ணயிக்கப்படும் செம்மை ஒன்று உள்ளது.




**இந்தப் பிரபஞ்சமே ஓர் ஒழுங்கில் இயங்குகிறது. மனித மூளையின் உற்பத்தி விஷயங்களைத் தவிர எங்குமே ஒழுங்கீனம் இல்லை. சூரியன் ஒரு நாள் கூட இது வரை மக்கர் செய்ததில்லை. ஒழுங்கான உணவு, மனநிலை, பழக்க வழக்கங்கள், சுகாதாரம் எல்லாம் செயல்திறனை அதிகரிக்கின்றன.**

மேலும், மேலும் இன்னமும், இன்னமும் என்று ஏற்றிக் கொண்டே போய் அதிக பட்சத்தை செம்மை என்று நினைப்பவர்களும் இருக்கிறோம். ப்ரையன் லாரா 375 ரன்களை டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அடித்து ஓர் உச்சத்தை எட்டினார். விரைவிலேயே அவுஸ்திரேலியாவின் மத்யூ ஹேய்டன் 380 ரன்களை அடித்து அதைத் தாண்டினார். ஆனால் ப்ரையன் லாரா என்கிற மேதை 400 ரன்களை எடுத்து மீண்டும் அந்த சாதனை-யை தனதாக்கிக் கொண்டார். இதில் செம்மை 375, 380, 400ல் இல்லை. (ஒரு விதத்தில் பார்த்தால் ப்ரையன் லாராவின் ஆட்டத்தில் இருக்கிறது.) அதிக பட்சம் என்பது செம்மையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதிக பட்ச உயரமோ, எடையோ, சிவப்போ, கறுப்போ, வேகமோ செம்மையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

எட்கர் ஆலன் போ: "எனக்கு மனித செம்மைத்தனத்தில் நம்பிக்கையில்லை. மனித யத்தனங்களால் மனித குலத்தின் மீது கணிசமான தாக்கம் இருக்காது என்றே நான் நினைக்கிறேன். 6000 வருடங்களுக்கு முன்பிருந்ததை விட இப்போது மனிதன் அதிக செயல் வேகத்தோடு மட்டுமே - அதிக சந்தோஷத்தோடோ, அதிக விவேகத்தோடோ அன்றி - இருக்கிறான்." என்று அதிக செயல்பாடுகள் மற்றும் செயல்பாட்டுத் திறன் அதிக மகிழ்வையோ, விவேகத்தையோ தரவில்லை என்று சுமார் ஒன்றே முக்கால் நூற்றாண்டுகளுக்கு முன் சொன்னது உண்மைதானே? அதற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின் தானே இரண்டு உலக மகா யுத்தங்களும் பல கோடிப் பேர்களின் மரண-மும், இதர, மனிதன் சம்பாதித்துக் கொண்ட துக்கங்களும் நிகழ்ந்துள்ளன?

இன்னும் அதிகம், இன்னும் துரிதம், இன்னும் வெண்மை,இன்னும் அடர்த்தியும் செம்மையாக வேண்டிய அவசியம் இல்லை. பணமோ, புகழோ, அதிகாரமோ அதிகரித்துக் கொண்டே போவதுதான் செம்மை என்கிற சிந்தனை சரியா? சென். எக்யூபரி சொல்கிறார்: "சேர்ப்பதற்கு மேலும் ஒன்றும் இல்லாதபோதன்றி, எடுப்பதற்கு எதுவும் இல்லாத போதே செம்மை அடையப்படுகிறது".

மனிதர்கள் மேன்மையெனக் கருதுபவை மட்டுமின்றி மிகக் கீழானவையும் இந்த செம்மையில் உள்ளடங்கியவையே. தீர்க்கப்படாத எத்தனை செம்மையான கொலைகள், திருட்டுகள் உள்ளன? இவையனைத்தும் மனதின் கணக்குப் போடும் திறமையினாலும், இதர மனித பலவீனங்களாலும் அனைத்தையும் மீறி அதிஷ்டத்தாலும் நிகழ்பவை.

எல்லா விஷயங்களையும் போலவே செம்மை பற்றியும் விசித்திரமான கருத்துகள் இருக்கின்றன. வடிவேலு ஒரு படத்தில் சொல்வது போல் "வெள்ளையா இருக்கிறவன் பொய் சொல்ல மாட்டான்" என்பது போல். அழகு, அறிவு பற்றிய நேர்மறை, எதிர்மறை கருத்துகள் உண்மையோடு சம்பந்தப்பட்டவையல்ல. கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு பாட்டில் சூப்பர் ஸ்டாரைச் சொன்னால், விவேக் ஒரு மேடையில் வெள்ளைதான் எனக்குப் பிடிச்ச கலரு என்று எம்ஜியாரைத் துணைக்கழைத்தார்.

ஆக மரபு, இலக்கணப்படி அமைந்த செம்மை, இச்சைப்படி அமைந்த செம்மை, அதிக பட்சம் என்பதாலும் வேறு விதங்களிலும் பௌதீகமாக அளக்கப்படும் செம்மை என்பன போல் இன்னும் பல வரையறைகளை நாம் காணக்கூடும். இவை அனைத்தும் இடம், காலத்தால் நிர்ணயிக்கப் படுவன.

இவற்றை மீறி ஒரு செம்மை, இடம் காலத்தால் கட்டுப்படுத்தப்படாது ஆனால் அவற்றின் தர்க்க நியாயங்களையும் திருப்தி செய்கிற ஒரு செம்மை உண்டா? மனித யத்தனத்தால் அது கூடுமா? அதைத்தான் மனிதன் கால காலமாக நாடுகிறான். அது அவனறியாத போது நேரிட்டு அவனை ஆட்கொள்கிறது.

ஸாகிர் ஹுசைனை இந்தியாவின் அழகான ஆண்களில் முதன்மையானவராக தேர்ந்தெடுத்ததும் அவர் சொல்கிறார் : "நான் அழகெல்லாம் இல்லை. தபேலாவை வாசிக்கையில் ஒரு கணத்தில் நான் அதன் இலக்கண, நனவு நிலைகளையெல்லாம் மீறி எங்கோ சென்று விடுகிறேன். அந்நிலையில் என்னைப் பார்த்தவர்கள் நான் அழகானவன் என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்."

நாட்டியத்தில், இசையில் ஓவியங்களில், சிற்பங்களில், சினிமாவில், நாடகத்தில், ஒரு நாவலில், கதையில், கவிதையில் இந்த விட்டு விடுதலையான நிலை ஒருவர் perform பண்ணுகையிலும், பார்த்து இரசிக்கையிலும் ∴ அனுபவிக்கையிலும் நிகழலாம். அது கால தேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்டது. இது வாழ்வின் ஒவ்வொரு துளியிலும், கணத்திலும் இயல்பாக இருப்பதும் ஆகும்.

Perfection ஏன் தேவை? மூளை உட்பட இந்த உடல் ஓர் ஒழுங்கு (Order) நிலவும் சூழலில் மட்டுமே சீராக செயல்பட முடியும். மன உளைச்சல், அல்லது மூளையில் பாதிப்பு, உறங்காமை, வலி, சுற்றுப்புற ஒவ்வாத சூழ்நிலை, சப்தம், ஒரே சமயத்தில் பல வேலைகள். இப்படியெல்லாம் இருக்கையில் வேலை சிறக்காது. பலசமயம் முடியவே முடியாது.

ஒழுங்கு இருக்கும்போதுதான் யாராலும், எதனாலும் செயல்பட முடியும். ஒழுங்கு இல்லாத இடத்தில் சச்சரவுகள், ஏற்றத் தாழ்வுகள், குறைபாடுகள், பின்னங்கள் இருக்கும். நமது உடலாலும், மூளையாலும் ஒழுங்கில்தான் சீராக செயல்பட முடியும். இரவு முழுவதும் விழித்திருந்து விட்டு, மூளை சோர்ந்த நிலையில் மறு நாள் வேலை செய்தால் அது சீராக வராது. உடல் நோவுடன் காரியங்கள் செய்வது மிகவும் கடினம்.

இந்தப் பிரபஞ்சமே ஓர் ஒழுங்கில் இயங்குகிறது. மனித மூளையின் உற்பத்தி விஷயங்களைத் தவிர எங்குமே ஒழுங்கீனம் இல்லை. சூரியன் ஒரு நாள் கூட இது வரை மக்கர் செய்ததில்லை. ஒழுங்கான உணவு, மனநிலை, பழக்க வழக்கங்கள், சுகாதாரம் எல்லாம் செயல்திறனை அதிகரிக்கின்றன.

கவனித்துப் பார்த்தால் வாழ்வின், உலகின் அச்சாக இவ்வொழுங்கு இருக்கிறது. இவ்வொழுங்கின் உயிர்த் தீயினிலே வளர் சோதியாக செம்மை இருக்கிறது.



# வெலிவேரிய சம்பவத்தை பயன்படுத்தி போர்க்குற்ற விசாரணைக்கு அழுத்தம்

## என்கிறார் பாதுகாப்புச் செயலர்



வெலிவேரியவில் போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையை பயன்படுத்தி, இராணுவத்தின் மீது அனைத்துலக போர்க்குற்ற விசாரணை நடத்தக் கோரும் அழைப்புகளைப் பலப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக குற்றம்சாட்டியுள்ளார் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ.

வெலிவேரிய சம்பவம் தொடர்பாக, அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.தே.க விடுத்துள்ள கோரிக்கை குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

“போராட்டம் நடத்தியவர்கள் மீது படையினரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சூழ்நிலை தொடர்பாக, இராணுவத் தலைமையகமும், தனித்தனியாக விசாரணைகளை நடத்தி வருகின்றன.

பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன் பாதுகாப்பு அதிகாரிகளின் தலைவரிடம், விடுத்த வேண்டுகோளை அடுத்தே, இராணுவம் அனுப்பிவைக்கப்பட்டது.

அவசரகால நிலையில், பாதுகாப்புப் படைகளை நிறுத்துவது தொடர்பான நடைமுறையே பின்பற்றப்பட்டது.

துரதிஸ்டவசமாக அவர்கள் மீது கற்கள் வீசப்பட்டதும், படையினர் பதிலடியில் இறங்கினர்.

விசாரணைகளில் எவர் மீதேனும் குற்றம்காணப்பட்டால், யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

படையினரின் தனிப்பட்ட செயல்கள், ஒட்டுமொத்த இராணுவத்தினதும் பெயரைக் கெடுப்பதற்கு அனுமதிக்க முடியாது.

படையினரையும், ஜனாதிபதியையும் வெறுக்கும் சக்திகளின் தந்திரோபாயத்தை நாம் அறிவோம்.

அனைத்துலக விசாரணைக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பு, படைகளுக்கு எதிரான அனைத்துலக போர்க்குற்ற விசாரணை அழைப்புக்கு வலுச் சேர்ப்பதாக உள்ளது.

போர் முடிவுற்ற பின்னர்., படையினர் மீது அனைத்துலக போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள வலியுறுத்தியவர்கள், வெலிவேரிய சம்பவத்தை பயன்படுத்தி, தமது கோரிக்கையை நியாயப்படுத்திக் கொள்கின்றனர்.

நந்திக்கடலில் நடந்த விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போருடன், வெலிவேரிய சம்பவத்தை ஒப்பிடுவதற்கு எதிர்க்கட்சிகள் மேலதிக நேரத்தை ஒதுக்கியுள்ளன.

இவையிரண்டுக்கும் எந்த ஒற்றுமையும் இல்லை. என்றும் அவர் கூறியுள்ளார்.

# அரசில் சக்தி வாய்ந்தவராக ஒரேயொரு முஸ்லிம் அரசியல்வாதி

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் சக்தி வாய்ந்த முஸ்லிம் அரசியல்வாதியாக ஒருவரே இருக்கின்றார் என்று அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள முஸ்லிம் அமைச்சரொருவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தின் ஏற்பாட்டிலான இப்தார் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கையில் அந்த அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபாவை காட்டி இவர் தான் இந்த அரசாங்கத்தில் சக்தி வாய்ந்தவர் என குறித்த முஸ்லிம் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளராக சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி செயற்படுகின்ற நிலையில், பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபாவும் மத்திய கொழும்பு அமைப்பாளராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வில் முஸ்லிம் அரசியல்வாதிகளில் பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா மாத்திரமே அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெலிவேரிய சம்பவத்தை அரசியலாக்குவதற்கு முயற்சி

## அமைச்சர் கெஹலிய காட்டம்

(கொழும்பு)

வெலிவேரியவில் இடம்பெற்ற சம்பவத்தை எதிர்க்கட்சிகள் அரசியலாக்கமுயல்வதாக அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

நவநீதம்பிள்ளைக்கு இலங்கை விமானப் படையின் விமானங்கள் மீது நம்பிக்கை இல்லையாம் : கெஹெலிய

இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு இலங்கை விமானப் படையின் விமானங்கள் மீது நம்பிக்கை இல்லையாம். இனி நாம் என்ன செய்வது? அப்படியானால் ஐ.நா. விமானத்திலேயே வந்து வடக்கு உட்பட தேவையான அனைத்து இடங்களுக்கும் சென்று எதிர்பார்க்கும் உண்மைகளை கண்டறிய நவநீதம்பிள்ளைக்கு அரசாங்கம் இடமளிக்கும்.

உலகத்தில் வேறு எந்தவொரு நாட்டிலும் மோதல் சம்பவங்கள் இடம்பெறுவதில்லையா? வெலிவேரியவில் ஒரு



சம்பவம் நடந்து முடிந்துவிட்டது. இதனை மீண்டும் தூண்டி அரசியலாக்க எதிர்க்கட்சிகள் முற்படுவது நியாயமில்லை. பொதுநலவாய மாநாட்டை பாதிக்கும் அல்லது ஐ.நா. மனித உரிமை பேரவையின் இலங்கைக்கு எதிராக மேலும் நெருக்கடிகள் வலுவடையும் என்பதெல்லாம் உள்நோக்கங்களைக் கொண்ட பிரசாரங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# அரசு காணிகளையும், கடலையும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை

## குற்றம் சுமத்துகிறார் ரவிகருணாநாயக்க



அரசாங்கம் காணிகளையும் கடலையும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். ஒவ்வொரு காணி அங்குலத்தையும் அரசாங்கம் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதுடன், கடலை சீனாவிற்கு விற்பனை செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊடாக அரசாங்கம் 568 ஏக்கர் கடற் பரப்பை சீனாவிற்கு விற்பனை செய்ய உள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 182 பில்லியன் ரூபா செலவில் இந்த கடல் பகுதியில் மண் நிரப்பப்பட்டு, நகரமொன்று அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மக்கள் குடிநீருக்காக உயிர் துறக்கும் தருணத்தில் யார் எதற்காக இதனைச் செய்கின்றார்கள் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார் டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் 6.5 ஏக்கர் காணி கசினோ சூதாட்ட மையத்திற்காக வழங்கப்படவுள்ளது.

ராஜகிரியவில் சதொச நிறுவனத்திற்கு சொந்தமான காணி வெளிநாட்டவர்ளுக்கு விற்பனை செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். நுரைச்சோலை அனல் மின் நிலையம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 2005 ஆம் ஆண்டில் 268 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டதாகவும், அதனை இரத்துச் செய்து அதே ஆண்டில் மீண்டும் 568 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான ஊழல் மோசடிகளினால் யார் நன்மை அடைகின்றார்கள் என ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

# வடக்கு அபிவிருத்தியை விரும்பாத அரசியல்வாதிகள்

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் அதனை தமிழ் அரசியல்வாதிகள் விரும்பவில்லை என அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இராணுவம் சாதாரண மக்களின் காணிகளை கைப்பற்றவில்லை. விடுதலைப்புலி பயங்கரவாதிகளின் காணிகளையே கைப்பற்றினர். காணி ஒன்றின் உரிமையை உறுதிப்படுத்த மக்களும் செய்ய வேண்டிய பணிகள் உள்ளன. தமிழ் மக்கள் மீள்குடியேறுவதில் இருந்த பிரதான தடை கண்ணி வெடிகளாகும். தமிழ் மக்கள் அபிவிருத்தியையே கேட்கின்றனர்.

# இனவிரோதம் வளர்த்து வாக்கு வேட்டைக்கு முயற்சி

## கூட்டமைப்பு மீது திஸ்ஸ விதாரண சாடல்



(கொழும்பு)

நாட்டின் மீதும், மக்களின் மீதும் எதுவித அக்கறையும் இல்லாமல் தேர்தலில் வெற்றி பெறுவதை மட்டுமே இலக்காகக்கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகிறது.

மாகாணசபைத் தேர்தல் நெருங்கி வருவதால் கூட்டமைப்பின் அரசியல் தகவல்கள இனவாத உணர்வைத்தூண்டி இனங்களுக்கிடையில் விரோதத்தை வளர்க்க விரும்புகின்றனார்.

இதன் மூலம் இவர்கள் தேர்தலின் போது அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கருதுகின்றனர்.

ஆனால் இது தமிழர்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டிற்கும் சாவுமணி அடிக்கும் முயற்சியாகும் என்றும், இது முழுமையாக தடுக்கப்பட வேண்டும் என்றும் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொழும்புக்கு மாத்திரம் மட்டுப்பட்டிருந்த அதிகாரம் கிராமங்கள் நோக்கி வியாபிப்பது மாகாண சபைகள் மூலமே எனவும், மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர் 13 ஆவது திருத்தச் சட்டமும் அதன் உள்ளடக்கங்களுக்கும் அமைய யுத்தம் முடிந்த பின்னர் நடக்கும் இந்தத் தேர்தல் முக்கியமானதென அவர் குறிப்பிட்டார்.

வடக்கிற்கு வீதி புனரமைப்பு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பது அரசாங்கத்தின் கடமை என்றாலும் தங்களுடைய பிரதிநிதிகள் மூலம் வடக்கு மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என அமைச்சர் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடாத்துவதன் மூலம் வடக்கு மக்களின் மனங்களை வெல்ல அரசாங்கத்தால் முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்மூலம் வடக்கு தேர்தலை உன்னிப்பாக அவதானிக்கும் சர்வதேசத்திற்கு நல்ல செய்தி சொல்லப்படும் என அவர் குறிப்பிட்டார்.

எனினும் தேர்தலில் இலாபம் பெறும் நோக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் அடிப்படைவாதிகளை ஊக்குவித்து வருவதாகவும் அது தெற்கில் சிங்கள அடிப்படை வாதிகளுக்கு ஆயுதம் வழங்கும் செயலுக்கு ஒப்பானது என்றும், இது முழு நாட்டுக்கும் ஆபத்தானது என்றும் அவர் தெரிவித்தார்.



இலங்கையிலுள்ள இஸ்லாமிய நாடுகளின் ராஜதந்திரிகளுக்கான இப்தார்தின இரவு உணவினை கடந்த புதன்கிழமை ஜனாதிபதி வழங்கினார். இந்த நிகழ்வில் இஸ்லாமிய ராஜதந்திரிகள், வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரதியமைச்சர் நியோமல் பெரேரா வெளிவிவகார அமைச்சு செயலாளர் கருணாதிலக் அமுனுகம, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ்குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரசாங்க கட்சிகளை ஆதரித்தால் மக்களின் எதிர்காலம் சிறப்பாக அமையும்

ஈ.பி.டி.பி யின் வவுனியா வேட்பாளர் சிவன் சிவகுமார்

(வவுனியா)

வட மாகாணசபையை அரச தரப்பினர் கைப்பற்றினால் பொலிஸ் காணி அதிகாரங்களை எடுத்துக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது என வட மாகாண சபையின் ஈ.பி.டி.பி கட்சியின் சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடும் சிவன் சிவகுமார் தெரிவித்தார்.

வட மகாணசபைத் தோதல் தொடர்பில் அவரிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தை ஆதரித்து நிற்கும் கட்சிகளை மக்கள் ஆதரித்தால் மக்களின் எதிர்காலம் சிறப்பாக அமையும் சந்தர்ப்பம் உள்ளது.ஏனெனில் வன்னியில் தான் யுத்தத்தின் கடைசிக் கொடூரமான சம்பவங்கள் இடம்பெற்று வன்னிப்பிரதேசம் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது.

இதனை கட்டியெழுப்பவும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் வேண்டுமாயிருந்தால் அரசாங்கத்துடன் இணைந்த கட்சிகளாலேயே அது சாத்தியமாகும். வேறு யாராலும் அது முடியாத காரியம் என்றே நாம் நம்புகின்றோம்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கைகளில் மாகாணசபை செல்லுமாக இருந்தால் தற்போது அவர்களது ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபை, நகரசபைகள் போன்றே எவ்வித வேலைத் திட்டங்களும் இல்லாது மாகாண சபையும் காணப்படும். இவ் மாகாணசபை ஈ.பி.டி.பி யின் கையில் கிடைக்கு மாயின் மக்களுக்கான நல்ல தொரு எதிர்காலம் அமையும் என்பது உண்மையான நிலை யாகும்.

இதேவேளை அரசாங்க தரப்பினர் மாகாணசபையை கைப்பற்றினால் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஆட்சி அமைத்தால் அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்காது அரசில் குறை கூறிக் கொண்டு மாகாணசபை கலைக்கப்பட்டு விடும் என்ற கருத்தை பரவவிட்டுக்கொண்டு இருப்பார்கள் என தெரிவித்தார். (160)

## மதுப்பிரியர்களின் அட்டகாசம் அச்சத்தில் பொது மக்கள்

(வரணி)

வரணி வடக்கு பிரதேசத்தின் கணுக்காய் பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் சொல்லணாத்துன்பமாக இருப்பதாக இப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளை மட்டுமல்லாது பகல் வேளைகளிலும் மது அருந்தும் மதுப்பிரியர்கள் வீதியால் செல்லும் போது மக்களின் வேலிகளை பிய்த்து வீண் தகராறில் ஈடுபடுவதாகவும் இதனால் மக்கள் தமது வீடுகளுக்கு முன்பாக வீதியில் நிற்பதற்கே அச்சம் தெரிவிக்கின்றனர். அண்மையில் மதுப்பிரியர் ஒருவர் போதை தலைக்கேறிய நிலையில் வீட்டு வேலிகளை பிய்த்து அடாவடியில் ஈடுபட்டுள்ளார்.

எனினும் பொது மக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தால் பின்னர் ஏதேனும் விபரீதம் ஏற்பட்டுவிடுமோ என மௌனமாக வாழ்வதாக அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர், (150)

## அலங்கார உற்சவம்

(சுன்னாகம்)

அருள்மிகு உடுவில் தெற்கு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர் வரும் 18அம் திகதி மாலை சப்பறத்திருவிழாவும்,19ஆம் திகதி தேர்த்திருவிழாவும்,20ஆம் திகதி தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறவுள்ளது.

21ஆம் திகதி மாலை 7 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், 23ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு வைரவப் பொங்கல் உற்சவமும் இடம் பெறவுள்ளது. உற்சவ பிரதம குருவாக கிரியைகளை சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் ஆற்றவுள்ளார். (120)

## சுகாதாரமற்ற வடிகால்வாய் துர்நாற்றம் வீசுவதாக விசனம்

(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள வடிகால்வாய்கள் துப்புரவு செய்யப்படாமையினால் துர்நாற்றம் வீசுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகம் மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் உட்பட நகர்ப்பகுதியில் உள்ள வடிகால்வாய்களே இவ்வாறு துர்நாற்றம் வீசுவதாகவும் இதன் காரணமாக இப்பகுதியால் பயணம் செய்வோர் அசுத்தமான காற்றை சுவாசிப்பதாகவும் தெரிவிக்கும் மக்கள் பாடசாலை அமைந்துள்ள பகுதியில் இவ்வாறு துர்நாற்றம் வீசுவதன் காரணமாக மாணவர்கள் அசௌகரியப்படும் நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மதியநேரங்களில் வடிகால்வாய்கள் அமைந்துள்ள பகுதிகளில் மக்கள் நடமாட முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுவதாகவும் இது தொடர்பில் வவுனியா நகரசபைக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர். (160)

## நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் மக்களுக்கான நடமாடும் சேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் பொது மக்களின் நலன்கருதி தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. எனவே பின்வரும் தேவையுடையோர் தவறாது இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

16 வயதினை பூர்த்தியடைந்து முதல் தடவையாக தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாதோர்.

நெடுந்நீவு பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய அடையாள அட்டையினை தொலைத்து,பிரதி தேசிய அடையாள அட்டையினை பெற்றுக் கொள்ளாதோர்.

தேசிய அடையாள அட்டை சேதமடைந்திருந்தால் அல்லது பழுதடைந்திருந்தால் அல்லது திருத்தம் செய்யவேண்டிய தேவை உடையோர்.

இந்திய அகதிகள் முகாமில் பிறந்த 16 வயதினை பூர்த்தியடைந்த முதல் தடவையாக தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், பிரஜாவுரிமைப்பத்திரம் இல்லாதோர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை தயார்படுத்திக் கொள்ளவும்.

தேர்தலின் போது வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை அவசியமாகும்.எனவே தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள விரும்புவோர் தமது கிராம அலுவலரை அல்லது பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நெடுந்தீவு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் 27 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்களை மதிப்பிடும் பணிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான கட்டுப்பாட்டுப் பரீட்சகர் பிரதம,மேலதிக பிரதம உதவி பரீட்சகர்களுக்கான கடிதங்கள் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள் மதீப்பீட்டுப் பணியின் முதலாம் கட்டப் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. மேலும் இரண்டாம் கட்டப் பணிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம திகதி நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்ததக்கது. (17)

## சுயதொழில் கொடுப்பனவு



(கரணவாய்)

கரணவாய் பிரதேசத்தில் சுயதொழில் மேற்கொள்ளும் குடும்பங்களுக்கு சமூக சேவைத திணைக்களத்தால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

முதற் கட்டமாக 9 குடும்பங்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் இவ்உதவியை பெற்று தொழில்களை திறம்பட மேற்கொண்டு வறுமை தணிக்க வேண்டுமென கரவெட்டி பிரதேச செயலர் எஸ் சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (18)

## இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். கைதடி இணுங்கித்தோட்ட கந்தசுவாமி ஆலய நற்பணிக்குழுவினரின் வெளியீடான முத்துக்குமரனின் முத்துச்சரம் இசைப்பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

இப்பாடல் இறுவட்டிற்கான பாடல்களை கவிப்புலவர் வேலணையூர் சுரேஷ்,கு.வீரா,சயந்தன்,ஞானம் ஆகியோர் இயற்றியுள்ளனர்.

நம் நாட்டுப் பாடகர்களான எஸ்.ஜி.சாந்தன், சுகுமார், சந்திர மோகன், எஸ்.பி ரூபன் பார்வதி சிவபாதம்,ஆகியோர் பாடி யுள்ளனர்.

இவ் இறுவட்டிற்கான இசையினை இசையமைப்பாளர் எஸ்.பி.ரூபன் வழங்கியுள்ளார்.

## முரசின் இன்றைய பலன்



(10.08.2013 சனிக்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 25 ஆம் திகதி.
நாகசதுர்த்தி விரதம் உத்தரநட்சத்திரம் பி.இ 02.01 வரை
மரணயோகம்,திருதியை சதுர்த்தி. இராகுகாலம 09.04- 10.34 வரை.
சுபநேரம 03.04-04.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அருந்துவதற்கு கேடுவிளைவிக்கும் தண்ணீர் போத்தல் பெறுதல்,காணி உரிமம் கிடைத்தல், கடன் பெறக் கையேந்தும் நிலைப்பாடு,சோம்பலைக் கைவிட்டதால் வெற்றிவாகை,பணவரவில் தாமதம். |
| ரிஷபம் | விளக்கமறியலில் தக்கவைத்தல் அதிகவட்டிக்குப் பணம் வாங்கியதால் அவலம்,இகழ்ச்சியைத் தாங்கியதால் நன்மை,வருமுன் காப்போம் என எச்சரிக்கையுடன் செயற்படல். |
| மிதுனம் | 'பேஸ்புக்கால்"துஷ்பிரயோக அவலம்,பெற்ற கடனை உரிய நாளில் செலுத்தாமையால் அவமானப் படல், கண்டும் காணாது இருப்பதினால் ஆபத்து விலகல்,பயணம் பற்றிய இரண்டுங்கெட்டான் நிலை. |
| கடகம் | பங்காளராகச்சேரும் எண்ணம்,போலிக்கௌரவ வேடம் கலைந்ததால் துயரம்,மனஉறுதியினால் காரிய ஜெயம்,நாசுக்காகச் சுட்டிக்காட்டுதல். |
| சிம்மம் | பொருட்களின் விலை எகிறும் நினைப்பில் பதுக்கல் முயற்சி, விடாமுயற்சி ஆர்வம் ஒழுங்கைக் கடைப்பிடித்ததால் உயர்வு,முகமலர்ச்சியுடன் இருப்பதினால் நண்பர், சேர்க்கை. |
| கன்னி | அத்தியாவசிய பொருட்களை மட்டும் வாங்குங்கள்,சோர்வினை விரட்டி ஆர்வத்துடன் செயற்படுங்கள்,கடனை அடைக்க நண்பரின் உதவி,நோய் கட்டுப்பாட்டில். |
| துலாம் | பாலியல் துன்புறுத்தல் பற்றிய முறைப்பாடு, கண்ணும் கருத்தோடும் செய்ததால் பாராட்டு, ஆவணப் பிரச்சினையால் அடையாள அட்டை பெற தாமதம், கோபத்தை ஒழிப்பின் விமோசனமுண்டு. |
| விருச்சிகம் | செலவு செய்தமைக்கு கணக்கு எழுதி வையுங்கள்,பாசத்தையும் நேசத்தையும் காட்டியமை யினால் ஆதரவு,மற்றவர்களின் மனது புண்படாமல் பார்த்துக் கொண்டால் கலகநாஸ்தி. |
| தனுசு | உடனடித்தேவையான பொருட்களை பட்டியல் இடுங்கள் பாசங்கு காட்டுபவரின் வேஷம் ,கலைந்து விடும், இடைத்தங்கல் நாட்டை கைவிட்டு தாயகம் திரும்பும் யோசனை. |
| மகரம் | தேவையில்லாத பொருளை கடனுக்கு வாங்கி போலி கௌரவத்தைக் காட்டல் ,அளவுக்கு அதிகமாகப் பேசி காரியநாசம்,இழுபடும் திருமண முயற்சியால் வேதனை. |
| கும்பம் | வருங்காலம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதை நினைத்தல் ,அபாண்டப்பழி சுமத்துதல்,அற்ப சந்தோஷம் சொற்ப நொடியில் அழிந்துவிடும், காசோலை திரும்புதல். |
| மீனம் | இலகுகடன் திட்டத்தால் பயனடைதல்,திறமையுடன் செயற்படுதல்,நண்பர்களின் ஒத்துழைப்பு ,மறைமுக எதிர்ப்புகள் விலகிவிடல், சுவீப்பில் பணம். |

# தூதுவரானார் டோனி



(புதுடில்லி)

உலகின் மிகப்பெரிய இங்கிலீஷ் கால்பந்து லீக் தொடரின் இந்திய தூதராக இந்திய கிரிக்கெட் அணி கப்டன் டோனி நியமிக்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட், ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 கிரிக்கெட் என, மூன்றுவித இந்திய அணிக்கும் கப்டனாக உள்ளார் டோனி. 2007இல் ருவென்ரி-20, 2011இல் உலக கோப்பை, இந்த ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணம் என, மூன்று கோப்பைகள் வென்று கொடுத்தவர்.

இவரை, இங்கிலீஷ் பிரிமியர் லீக் (இ.பி.எல்.,) கால்பந்து தொடரின், இந்திய தூதராக நியமித்தது ஸ்டார் ஸ்போர்ட்ஸ் தொலைக்காட்சி நிறுவனம். இதையடுத்து, இத்தொடரை பிரபலப்படுத்தும் விளம்பரங்களில், அடுத்த வாரம் முதல் டோனி தோன்றவுள்ளார். அதாவது, கால் பந்துப் போட்டியுடன் இணைந்திருங்கள் என, அனைத்து விளையாட்டு இரசிகர்களையும் டோனி அழைக்கவுள்ளார்.

டோனி இயற்கையாகவே கால்பந்துப் போட்டிகளில் ஆர்வம் கொண்டவர். மான்செஸ்டர் யுனைட்டட் கிளப் அணியின் தீவிர இரசிகர்.

இது குறித்து டோனி கருத்துத்தெரிவிக்கையில், கிரிக்கெட் போட்டிகளில் பிசியாக இல்லாத வார நாட்களில், கால்பந்துப்போட்டிகளில் இணைந்து விடுவேன். எனது பள்ளி நாட்களில் கால்பந்து விளையாடும் போது, நான் தான் கோல் காப்பாளராக இருப்பேன்.

இன்றைக்கும் முக்கியமான கிரிக்கெட் போட்டிகளுக்கு முன், கால்பந்து விளையாடித்தான் என்னை தயார் செய்து கொள்வேன். கிரிக்கெட் மீது தீவிர பற்று வைத்திருக்கும் அதேநேரம், இந்திய விளையாட்டு இரசிகர்கள், அனைத்துப் போட்டிகளையும் இரசிக்க வேண்டும். மற்ற விளையாட்டுகளுக்கும் மதிப்புத் தர வேண்டும்.

இங்கிலீஷ் லீக் தொடரின் போது, 100 போட்டிகளுக்கும் மேல் இந்தியில் வர்ணனை செய்யவுள்ளது, கால்பந்துப் போட்டிகளை பார்க்கும் ஆர்வத்தை அதிகரிக்கும். இம்முயற்சி இந்தியா முழுவதிலும் புதிய இரசிகர்களை கொண்டு வரும். இதேபோல, ஏனைய விளையாட்டுகளையும் ஊக்குவிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# டோனியின் நிழலா?



(பிரிட்ஜ்டவுன்)

போலார்ட்டின் ஆட்டத்தைக் கணிக்கும் விதமும், கடினமான சூழலில் பொறுமையுடன் நடந்து கொள்ளும் தன்மையும் எனக்கு இந்திய அணிக் கப்டன் டோனியையே ஞாபகப்படுத்துகின்றது என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் ஜாம்பாவன் தேஸ்மான்ட் ஹெய்ன்ஸ் தெரிவித்துள்ளார்.

அணிக்குச் சிறிது காலம் துடுப்பாட்டப் பயிற்சி ஆலோசகராக இருந்த போதே போலார்ட்டை நான் பார்த்திருக்கிறேன். கிரிக்கெட் விளையாட்டு மற்றும் அதன் யுக்திகளை எளிதில் புரிந்து கொள்பவர்களில் போலார்ட்டும் ஒருவர் என்று நான் எப்போதும் நினைப்பது உண்டு.

இப்போது பார்படோஸ் ட்ரிடென்ட்ஸ் அணியின் பயிற்சியாளராக இருப்பதால், அவருடன் இணைந்து நெருங்கி பணியாற்றி வருகிறேன். அவர் மீது அதிக மரியாதை வைத்திருக்கிறேன். நிறைய விடயங்களில் அவர் இந்திய அணியின் கப்டன் டோனியை ஞாபகப்படுத்துகிறார். டோனியுடன் அவரை ஒப்பிடுவது பெரிய விடயம் என்பதை நான் அறிவேன்.

ஆனாலும் தெரிந்து தான் இதைச் சொல்கிறேன். ஓர் கப்டனாக களத்திலும் சரி, வெளியிலும் சரி அணியின் மற்ற வீரர்களுக்கு அவர் முன்னுதாரணமாக விளங்குகிறார். ஆட்டத்தை அவர் கணிக்கும் விதமும், கடினமான சூழலில் பொறுமையுடன் நடந்து கொள்ளும் தன்மையும் எனக்கு அவர் டோனியைத் தான் நினைவுக்கு கொண்டு வருகிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முதன் முறையாக ரியல் மட்ரிட் சம்பியன்



(மியாமி)

செல்சி அணிக்கு எதிரான சம்பியன்ஸ் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ரியல் மட்ரிட் அணி, சம்பியன் பட்டம் வென்றது.

அமெரிக்காவில் சம்பியன்ஸ் கோப்பைக் கால் பந்துத் தொடர் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் ரியல் மட்ரிட், செல்சி அணிகள் மோதின. போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ரியல் மட்ரிட் அணிக்கு மார்சிலோ (14ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். இதற்கு செல்சி அணியின் ராமிரஸ் (16ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்தார்.

நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ (31ஆவது நிமிடம்) ஒரு கோல் அடிக்க, ரியல் மட்ரிட் அணி முதல் பாதியில், 2-1 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து அசத்திய றொனால்டோ 57ஆவது நிமிடத்தில் மற்றொரு கோல் அடித்தார். முடிவில், ரியல் மட்ரிட் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

## கற்றுக்கொண்டோம்

வலுவான அணியிடமே தொடரை இழந்திருக்கின்றோம். தென்னாபிரிக்காவுடனான ருவென்ரி-20 தொடர் தோல்வியில் நிறைவடைந்தாலும் அதில் நிறைய பாடங்களைக் கற்றுக்கொண்டோம். எதிர்வரும் தொடர்களில் இது நல்ல பயனைத் தரும் என நம்புகின்றேன். உள்ளூர் தொடர்களில் அதிகம் கவனம் செலுத்தி இளம் வீரர்களை உருவாக்குவதே எமது முக்கிய நோக்கம் என இலங்கை அணியின் ருவென்ரி-20 கப்டன் சண்டிமல் தெரிவித்தார்

# கடுமையான சட்டம் வேண்டும்



(பெங்களூர்)

கிரிக்கெட் சூதாட்டத்தை நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையிலான குற்றமாக இருக்க வேண்டும் எனக் கருதுகிறேன். சூதாட்டத்தைத் தடுக்க அரசு கடுமையான சட்டங்களைக் கொண்டு வர வேண்டும். இதன்மூலம் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபடுவதைத் தடுக்க முடியும். கடுமையான நடவடிக்கைகள் மூலமே சூதாட்டத்தைத் தடுக்க இயலும் என இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கிரிக்கெட் மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளது. இதனால் சூதாட்டம் தொடர்பாக பதிலளிக்க வேண்டிய நிலையும் உள்ளது. இதனை உடனடியாகவே தடுக்க வேண்டும்.

அத்துடன் இரசிகர்களின் நம்பிக்கைக்குரிய வகையில் கிரிக்கெட் போட்டிகளை முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் அதிக இரசிகர்களைக் கொண்ட இந்தியா நாட்டிலேயே கிரிக்கெட் குறித்த நம்பகத் தன்மை கெட்டுப்போய்விடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# பார்சிலோனா கோல் மழை

(பாங்ஹொக்)

தாய்லாந்து அணிக்கு எதிரான சர்வ தேச நட்பு கால்பந்துப் போட்டியில், பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. பார்சிலோனா, தாய்லாந்து அணிகள் மோதிய சர்வதேச நட்பு கால்பந்துப் போட்டி பாங்ஹொங்க்கில் நடந்தது. ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு, அறிமுக வீரர் நெய்மர் (12ஆவது நிமிடம்) முதல் கோலை அடித்தார். தொடர்ந்து நட்சத்திர வீரர் மெஸ்சி (13, 25ஆவது நிமிடங்களில்), பெட்ரோ (19,3625ஆவது நிமிடங்களில்) ஆகியோர் தலா இரண்டு கோல் அடித்தனர்.

48, 49ஆவது நிமிடங்களில் பெட்ரோ, சான்ஷ்ஸ் ஆகியோர் கோல் அடித்தனர். தாய்லாந்து அணிக்கு ஸ்ரீபன் (43ஆவது நிடம்) மட்டும், ஒருகோல் அடித்து ஆறுதல் தந்தார். முடிவில், பார்சிலோனா அணி 7-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# லாரா மேலானவர்தான்



(கராச்சி)

சச்சின் டெண்டுல்கர், ரிக்கி பொண்டிங் ஆகியோரை விட லாரா ஒரு படி மேல்தான் எனக்குத் தெரிகிறது என பாகிஸ்தான் சகலதுறை வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் லாராதான் சிறந்தவர் என்பது எனது கருத்து. அவரைப் போன்ற வீரரை நான் பார்த்ததில்லை.

லாராவை வீழ்த்துவது என்பது ரொம்பக் கஷ்டமான காரியம். ஒவ்வொரு விதமான கிரிக்கெட்டிலும் நிபுணத்துவம் பெற்றவர் லாரா. பவுண்டரிகள் அடிப்பதில் அவரை மிஞ்ச முடியாது.

குறிப்பாக சுழற்பந்து வீச்சு என்றால் லாராவுக்கு லட்டு சாப்பிடுவது போல. பின்னி எடுத்து விடுவார். அருமையான வீரர். இரசித்துப் பார்க்கலாம் அவரது ஆட்டத்தை.

பந்து வீச்சாளர்களைப் பொறுத்தவரை கிளென் மெக்கிராத் அருமையான பந்து வீச்சாளர். அதேபோல முகமது ஆசிப்பும் நல்ல பந்து வீச்சாளர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சச்சினை விட லாரா தான் சிறந்தவர் என அவுஸ்ரேலிய முன்னாள் கப்டன் பொண்டிங் கருத்துத் தெரிவித்துள்ள நிலையில், பொண்டிங்கின் கருத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் அப்ரிடியின் கருத்து அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொடரும் தோல்வி

(ரொரன்ரோ)

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் இந்தியாவின் சானியா, சீனாவின் ஜியா செங் ஜோடி தோல்வியடைந்தது.

கனடாவில் உள்ள ரொரன்ரோ நகரில் ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் பெண்கள் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் சானியா, சீனாவின் ஜியா செங் ஜோடி, ஜோர்ஜியாவின் அக்சனா, போலாந்தின் அல்சிஜா ஜோடியை சந்தித்தது. முதல் செட்டை 6-3 என வென்ற சானியா ஜோடி, இரண்டாவது செட்டை 1-6 என கோட்டை விட்டது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் சூப்பர் டைபிரேக்கரில் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்திய சானியா ஜோடி 6-10 என இழந்தது. முடிவில், சானியா, ஜியா செங் ஜோடி 6-3, 1-6, 6-10 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறியது.




போட்டிக்குத் தயாராகும் சவாரி மாடுகளையும், காளை மாடு ஜோடி ஒன்று சீறிப்பாய்வதையும் காணலாம்

விளையாட்டுச் செய்திகள்

# பூநகரியில் சிறப்புற நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டி சவாரி

(பூநகரி)

வடக்கு மாகாண மாட்டுவண்டி சவாரிப் போட்டியாளர்களுக்கான மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி கடந்த 4ஆம் திகதி பூநகரி சாமிப்புலம் சவாரித் திடலில் நடைபெற்றது.

பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினரால் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடாத்தப்பட்டது. இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியாளர்கள் பங்குகொண்டனர்.

ஏ,பி,சி,டி என நான்கு பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெற்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்டோர் விபரம் வருமாறு:

ஏ பிரிவுக்கான போட்டியில் முதலாமிடத்தை பா. இராசன் (விசுவமடு), இரண்டாமிடம் இ. பிரதீபன் (முறிகண்டி), மூன்றாமிடம் சு. கவி (பரந்தன்)

பி பிரிவுக்கான போட்டியில் முதலாமிடம் கி.நிமலன் (பூநகரி), இரண்டாமிடம் சு. கர்நிசா (பரந்தன்), மூன்றாமிடம் க. தர்மராஜா (கண்டாவளை)

சி பிரிவுக்கான போட்டியில் முதலாமிடம் ஆர். திலீபன் (பன்னங்கண்டி), இரண்டாமிடம் கே. கிருஷ்ணா (வட்டுக்கோட்டை), மூன்றாமிடம் எஸ். திஸ்னி (பன்னங்கண்டி)

டி பிரிவுக்கான போட்டியில் முதலாமிடம் ஆ. கிருசானி (பிரமந்தனாறு), இரண்டாமிடம் த. பற்குணம் (கோணாவில்), மூன்றாமிடம் கி. பகிரதன் (முட்கொம்பன்)

பூநகரிப் பிரதேச செயலர் கே. எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் மாட்டு வண்டிச் சவாரிச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர். (112)

## ஆரம்பமானது 2ஆவது சுற்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 மற்றும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் நடாத்தி முடிக்கப்பட வேண்டும் என இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலை அணிகளும் தலா மூன்று போட்டிகளில் இரண்டாவது சுற்று ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள நிலையில் தற்போது போட்டிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருப்தியடையவில்லை

எனது வெற்றிகள் குறித்து இன்னமும் திருப்தியடையவில்லை. இன்னும் அதிகமான வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளவே விரும்புகின்றேன் என நட்சத்திர ரெனிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

நான் இன்னமும் திருப்தியடையவில்லை. நான் மகிழ்ச்சியாகக் காலங்களைக் கழித்து வருகின்றேன். ரென்னிஸ் தொடர்களில் இன்னும் அதிக வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

எனக்கு வயது ஒரு பிரச்சினை என பலர் கருதுகின்றனர். என்னைப் பொறுத்த வரையில் வயது பிரச்சினையாக இல்லை. உடலில் வலு உள்ளவரை வயதைப் பற்றி அலட்டிக் கொள்ளத்தேவையில்லை.

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி விரைவில் ஆரம்பமாகவுள்ளது. அதனை வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்பதே எனது தற்போதைய நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சுந்தரலிங்கம் கிண்ணம் சுவீகரித்தது சீஸ்ரார்

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்ட அமரர் சுந்தரலிங்கம் நினைவு மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சீஸ்ரார் அணி கைப்பற்றிக் கொண்டது.

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட இம்மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி கடந்த வாரம் ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அதில் ஊரெழு றோயல் அணியும், சீஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஊரெழு றோயல் அணி நிர்ணயிக்கப்பட்ட ஏழு ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சசி ஏழு ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 36 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சீஸ்ரார் அணி 5 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மைக்கல் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் சீஸ்ரார் அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக சீஸ்ரார் அணியைச் சேர்ந்த மைக்கல், தொடர் ஆட்டநாயகனாக ஊரெழு றோயல் அணியைச் சேர்ந்த பிரதாப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வுகள் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இதில் கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், விளையாட்டுக் கழகங்களைச்சேர்ந்த அதிகாரிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது.

## இணுவில் அறிஞர் வி.க.வின் மாபெரும் தாச்சி 2ஆவது சுற்று ஆட்டங்கள் ஆரம்பம்

(இணுவில்)

இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்து இரண்டாவது சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.


யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழகம் மாபெரும் தாச்சிப் போட்டியை நடாத்தி வருகின்றது.

கடந்த 26ஆம் திகதி முதல் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்றன. இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 21இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்டன.

இதில் இரண்டாவது சுற்றுக்கு பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர், சண்டிலிப்பாய் உதயசூரியன், உடுவில் வைகாரை ஏ, பி, நுணாவில் நாவலர், சுன்னாகம் காந்தரூபன், மயிலிட்டி வள்ளுவர், உடுவில் ஆலடி சிந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ள அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியும், சண்டிலிப்பாய் உதயசூரியன் அணியும் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் உதயசூரியன் அணி 6-5 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்றது.போட்டி தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புத்தூர் கிழக்கு ராஜன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 3ஆம் திகதி முன்பள்ளி முன்றலில் நடைபெற்றது. இதில் சிறார்களின் பல போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறுவதையும், சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (இ)

# தமிழ்சினிமா கண்டெடுத்த காதலன்!

- அதிஷா -

தமிழ்சினிமா நாயகிகள் பொறுக்கிகளை காதலிக்கிற பழக்கம் எப்போது தொடங்கியது என்று தெரியவில்லை. எம்.ஜி.ஆர். போல நல்லவனாகவோ சிவாஜிபோல எமோஷனலாகவோ இருந்தால் நாயகிகள் விரும்புவதில்லை. அட ரஜினிபோல ஸ்டைலாகவோ கமல்போல ரொமான்டிக்காக இருந்தாலும் கூட நாயகிகள் ரசிப்பதில்லை.

எப்போதும் குடித்துவிட்டு, தாடியோடு கையில் சிகரட்டோடு, போதையில் புரள்கிறவனை, சம்பாதிக்க வக்கில்லாமல் ஊரை ஏமாற்றி ரவுடித்தனம் செய்து பிழைக்கிறவனை, காசுக்காக தாய்தந்தையரையே உதைக்கிற முட்டாள்களைத்தான் தமிழ்சினிமா நாயகிகளுக்கு கடந்த சில ஆண்டுகளாக மிகவும் பிடிக்கிறது.

நிறைய சங்கறுப்பதும் பலபேருடைய குடியை கெடுப்பதும் கூட காதலுக்கு க்வாலிபிகேஷன் ஆகியிருக்கிறது. குடிபொடிபீடி பழக்கங்களில்லாத சொ.்.ப்ட் பாத்திரங்கள் காமெடியர்களாக டம்மிபீஸ்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். அவர்களுடைய காதல் எப்போதும் நிறைவேறுவதேயில்லை.



இப்படி போதையில் திளைக்கிற நம் நாயக தியாக புண்ணிய ஆத்மாக்களுக்காக தன் உயிரையும் தியாகம் செய்ய துணிகிறார்கள் தமிழ்சினிமா காதலிகள்.

தன்னுடைய தாய்தந்தையரையும் தூக்கிப்போட்டு மிதிக்கிற அளவுக்கு அவர்களுக்கு காதல் மீது பற்றும் அன்பும் இருக்கிறது. இதுபோன்ற காட்சிகளை கொண்ட படங்கள் கடந்த பத்தாண்டுகளில் குறைந்தது நூறாவது வந்திருக்கும்.. நூறு என்பது குறைவான எண்ணிக்கையே.. இதைவிடவும் அதிகமாக இருக்கலாம்.

இப்படிப்பட்ட படங்களே நூறுநாட்கள் ஓடி கோடிகளை குவிக்கிறது. சமீபத்தில் வெளியான குட்டிபுலிவரை இதே கதைதான். இதே கான்செப்டில் இன்னும் நாலு டசின் படங்கள் கோலிவுட்டில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் தொலைகாட்சியில் ஒரு இயக்குனர் தன்னுடைய மகள் நல்லவனை காதலித்திருந்தால் சேர்த்து வைத்திருப்பேன் என்று கதறி அழுதுகொண்டிருந்தார். அவரை தேற்றிக்கொண்டிருந்தவர் அமீர் என்கிற மற்றொரு இயக்குநர்.

பருத்திவீரன் என்கிற படத்தின் மூலமாக காதலுக்கு மரியாதை செலுத்தியவர் இவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அந்த காலத்து நம்பியார் வீரப்பாவை விட மோசமான வில்லனை நாயகனாக்கி அழகு பார்த்தவர். அப்படிப்பட்ட மோசக்காரனுக்காக தன் உயிரையும் தியாகம் பண்ணின காதலியாக ப்ரியாமணி சிறப்பாக நடித்திருப்பார்.


அமீரைப்போலவே அதேபாணியில் குடிகார காமவெறி, காதலன்களை முன்னிறுத்தி படமெடுத்த வேறு சில இயக்குநர்களையும் மகளுக்காக கதறிய இயக்குனருடன் கூடவே பார்க்க முடிந்தது. எல்லாருமே காதலை பிரிக்க போராடிக்கொண்டிருந்தனர். பார்க்கவே பாவமாக இருந்தது.

பத்திரிகைச் செய்திகளின் மூலம் தெரிந்துகொண்டது என்னவென்றால் அந்த அப்பா இயக்குநரின் மகளின் காதலன் நிறைய குடிப்பாராம். பல பெண்களோடு தொடர்புள்ளவராம். வேலை வெட்டிக்கு போகமாட்டாராம். இப்படியொரு மாப்பிள்ளை கிடைக்க அந்த இயக்குநர் கொடுத்துவைத்திருக்க வேண்டுமே! ஏன் எதிர்க்கிறார்கள் என்பதுதான் விளங்கவில்லை.

போகட்டும். தமிழ்சினிமா கண்டெடுத்த முத்தாக அந்த காதலனை பார்க்கிறேன். அவருடைய காதலை வாழவையுங்கள் பெரியோர்களே தாய்மார்களே!

---

# தொட்டதெல்லாம் பொன்னாகும்!



"ஒரு தவறான காரியத்தைச் செய்வதற்கு எந்த ஒரு சரியான வழியும் கிடையாது."

தவறு என்று தெரிந்தால் செய்யக்கூடாது. அதற்கு நியாயம் கற்பிக்கக்கூடிய வழிகள் இருந்தாலும் தவறு தவறுதான். சட்டத்தில் ஓட்டைகள் இருக்கலாம். எதிராளி சாமர்த்தியம் இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் நமக்கு அது தவறு என்று தெரிந்தால் அதைச் செய்யாமல் இருப்பதுதான் ஒழுக்கம்.

அவர் ஒரு வியாபாரி. அவருக்கு ஓர் பகுதியில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இரவு 12 மணியிலிருந்து அதிகாலை 3 மணிவரை அங்கு மீன்பிடிக்க அனுமதி இருந்தது. அந்த ஜப்பானிய பெரியவரும் அவர் மகனும் மீன் பிடித்துக் கொண்டிருக்க அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் முடிகிறது. அப்போது மகன் போட்ட தூண்டிலில் பெரிய மீன், மிகப் பெரிய மீன் சிக்குகிறது. மகன் ஆனந்தப்பட்டு கூச்சல் போடுகிறான். ஆனால் அவன் தந்தை அதை மீண்டும் ஏரியிலேயே விட்டுவிடச் சொல்கிறார்.

"நம் நேரம் முடிந்தபிறகு கிடைத்த மீன் அது. நமக்குச் சொந்தமில்லை. ஏரியிலேயே விட்டுவிடு!" என்கிறார் பெரியவர்.

"நமது நேரம் முடிந்தது இதோ, இப்போதுதானே... அதுவும் இதை யாருமே பார்க்கவில்லை அப்பா." என்றான் பையன்.

பெரியவர் ஒப்புக்கொள்ளவில்லை. "இல்லை.. வேண்டாம். விட்டுவிடு!"

ஆண்டுகள் பல ஓடுகின்றன. அதே ஏரிக்கரை. அந்தப் பெரியவர் இப்போது இல்லை. மகனும் அவனுடைய மகனும் வந்திருக்கிறார்கள்.

அந்தப் பழைய சம்பவத்தை தன் மகனுக்கு இவர் சொல்கிறார். சொல்லிவிட்டு, "அன்று என் தந்தை சொல்லியதைக் கேட்டதால் அந்த மீனை இழந்தேன். ஆனால் அவர் சொல்லிக் கொடுத்த நேர்மையின் மூலம் வாழ்க்கையில் பலவற்றையும் பெற்றேன்" என்று.

நேர்மையாக இல்லாமல் போவதால் சிலசமயங்களில் குறுகிய கால நன்மைகள் கிடைக்கலாம். அன்றைக்கு அந்த ஜப்பானியப் பெரியவர் - தன் மகன் சொல்லியபடி அந்தப் பெரிய மீனை எடுத்துப் போயிருக்கலாம். அதன் மூலம் அதிகப் பணமும் சம்பாதித்திருக்கலாம். அவர்கள் செய்ததை நிச்சயம் எவரும் பார்க்கவில்லைதான். ஆனால் அப்படிச் செய்திருந்தால் அது ஒரு "ருசி காணவைத்த" செயலாயிருக்கும். அப்படிப்பட்ட செயல்களைத் தொடர்ந்து செய்திருப்பார்கள். பின்னாளில் அதேபோன்று ஏதோ ஒரு தவறான செயலால், மாட்டிக் கொண்டிருப்பார்கள். வியாபாரம் கெட்டிருக்கும்.

தவறு செய்வதும் செய்யாமல் இருப்பதும் ஒருவித மனோபாவம். அது ஒரு பழக்கம். அதை ஒருமுறை செய்யத் தொடங்கிவிட்டால், செய்யப் பழகிவிட்டால் விடமுடியாது. பிறகு என்றாவது ஒருநாள் மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கும். அது ஒருவருடைய நீண்ட காலத்திட்டங்களைக் கெடுத்துவிடும்.

எனப்படும் மதிப்பீடுகள் - வாழ்க்கையில், வியாபாரத்தில் மிகமிக முக்கியம்.

**('தொட்டதெல்லாம் பொன்னாகும்' நூலில் சோம.வள்ளியப்பன்)**

---

# தாரிக் அலி சொன்னதுதான் நினைவுக்கு வருகிறது...

அ.மார்க்ஸ் -


இரு வாரங்களுக்கு முன் புகழ் பெற்ற இடதுசாரிச் சிந்தனையாளர் / பத்திரிகையாளர் / நூலாசிரியர் தாரிக் அலி சென்னையில் பேசிய கூட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன். அவர் சொன்ன ஒரு கருத்து இப்படியாக அமைந்தது.

உலகமயம் தகவல் பெருக்கத்தில், காட்சி மற்றும் அச்சு ஊடகங்களின் விகசிப்பில் ஒரு மிகப்பெரிய வெடிப்பை நிகழ்த்தியுள்ளதென்னவோ உண்மைதான். ஆனால் அதே நேரத்தில் பெரிய அளவில் globalize ஆகியுள்ள நமது காட்சி மற்றும் அச்சு ஊடகங்கள் பெரிய அளவில் உள்ளூர் பிரச்சினைகளில் அமிழ்ந்து போய்விடுகின்றன. localize ஆகிவிடுகின்றன.

உள்ளூர்ப் பிரச்சினைகள் முக்கியமல்ல என்பதல்ல. அவை மிக மிக முக்கியம் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அதற்குரிய முக்கியத்துவங்களைத் தாண்டி அவற்றை முதன்மைப் படுத்தி, உள்ளூர் மக்களையும் பாரிய அளவில் பாதிக்கும் இன்னும் பல முக்கிய செய்திகள், பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப் படுவதும், முற்றிலும் விவாதங்கள் இல்லாமற் போவதும் கவலை அளிக்கின்றன. மேலுக்கு வரும் உள்ளூர்ப் பிரச்சினைகளும் கூட அவற்றின் சகல பரிமாணங்களுடனும், ஒரு உலகளாவிய பின்னணியுடன் விவாதிக்கப்படுவதில்லை.

எந்தக் கருத்தும் முழுமையாகப் பார்க்கப்படுவதில்லை. ஒருவகையான தடாலடி அட்வென்சரிசம்தான் மேலெழுந்து நிற்கிறது. அப்படியாவதில் ஊடகங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. எந்தப் பிரச்சினையிலும் இரண்டு extremes களுக்கும் இடையில் உள்ள அம்சங்கள் முக்கியமிழந்து போகின்றன. சொல்லப்போனால் அதற்கு இடமே இருப்பதில்லை. இப்படியானதில் காட்சி ஊடகங்கள் நடத்தும் விவாத நிகழ்வுகள் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன.

முகநூல் பக்கங்களும் பெரும்பாலும் இதே நிலையில்தான் உள்ளன. மனதில் பட்டவற்றை உடனடியாகவும், தணிக்கை தயக்கமில்லாமலும் வெளிப்படுத்தும் வாய்ப்பைச் சமூக ஊடகங்கள் ஏற்படுத்தியுள்ளது வரவேற்கத்தக்க ஒன்று. நண்பர்கள் பலரின் க்ரியேட்டிவிடி, நகைச்சுவை, சமயோசிதம், intertextuality, மொழி லாவகம், அசத்தலான நினைவாற்றல் எல்லாம் பிரமிக்க வைக்கின்றன. பலவற்றை நான் மிகவும் ரசித்துப் படிக்கிறேன். எனினும் இத்தகைய உள்ளூர்ப் பிரச்சினைகளில் காட்டும் மிகை எளிமை அட்வென்சரிசம் சற்றே கவலை அளிக்கக் கூடியதாகத்தான் உள்ளது.



---

# ATTITUDE

## 1+20+20+9+20+21+4+5=100%

ஆங்கிலத்தில் உள்ள வார்த்தைகளில் மிகவும் விசித்திரமானது ATTITUDE என்னும் வார்த்தை. மனிதர்களிடம் நேர்மை இருந்தால் எதையும் சாதிக்கலாம். 100 வீதம் மனிதனாக வாழலாம். ஆங்கில எழுத்துக்களான A, B, C, D, E முறையே 1,2,3,4,5... என்று Z இற்கு 26 என்றும் எண்களைக் கொடுங்கள். பிறகு ATTITUDE இற்கு எவ்வளவு மதிப்பெண் வருகின்றது என்று பாருங்கள். A - 1, T 20 இப்படியே மதிப்பெண் கொடுத்தால் ATTITUDE க்கு மொத்தம் 100 மதிப்பெண்கள் வரும்!

# எம்.கே.டி. எனும் பண்ணிசைப் பாவலன்

06

- வே. முத்துக்குமார் -

அதற்கடுத்த நாள் (நவம்பர் 9, 1944) யாரும் எதிர்பாராத விதமாக மருத்துவமனையில் வைத்து இறந்து போனார் லட்சுமிகாந்தன். லட்சுமிகாந்தன் கொலை வழக்கு சம்பந்தமாக எட்டு நபர்களைக் பொலிஸார் கைது செய்தனர். அந்த எட்டு நபர்களில் ஒருவர் எம்.கே.டி., மற்றொருவர் என்.எஸ்.கிருஷ்ணன். தமிழ்த் திரையுலகில் கொடி கட்டிப் பறந்த இந்த இருவரது கைது சம்பவம் ஒட்டுமொத்த திரையுலகை மட்டுமல்லாது, இரசிகர்களையும் பெருத்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது. வழக்கமான நீதிமன்றச் சம்பிரதாயங்களுக்குப் பிறகு மெட்ராஸ் ஹைகோர்ட்டில் நீதிபதி வோரா மார்கரெட் முன்பு விசாரணைக்கு வந்தது வழக்கு. நீண்ட நேர விவாதங்களுக்குப் பிறகு, மேல் அப்பீலுக்கு அனுமதி அளித்தார் ஜுூரி. ஆனால் யாரும் எதிர்பாராத விதமாக அப்பீல்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. பிறகு லண்டனிலுள்ள பிரீவ்யூ கவுன்சிலில் இருவரும் அப்பீல் செய்தனர். இருவர் சார்பாக சர்வதேசப் புகழ்பெற்ற பிரிட்டிஷ் பாரிஸ்டர் டி.என். பிரிட் வாதாடினார். நீண்ட விசாரணைக்குப் பிறகு வழக்கை மீண்டும் இந்தியாவில் வைத்துப் புதிதாக விசாரிக்கக் கோரி உத்தரவிட்டது பிரீவ்யூ கவுன்சில்.

நீதிபதிகள் ஹோபல் மற்றும் ஷகாபுத்தீன் (1947-ஆம் ஆண்டிற்குப் பிறகு பாகிஸ்தானிற்குப் புலம்பெயர்ந்த இவர், பிற்காலத்தில் பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட் முதன்மை நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்) ஆகியோர் முன்பு அப்பீல் விசாரணைக்கு வந்தது. குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இருவர் சார்பாகவும் புகழ்பெற்ற பாரிஸ்டர் வி.எல்.எத்திராஜ் ஆஜராகி வாதாடினார். திரைத்துறையில் எம்.கே.டி. என்.எஸ்.கே. ஆகிய இருவருக்கும் உள்ள புகழுக்குக் களங்கமளிக்கும் விதமாகவே அவர்களிருவரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இருவருக்கும் எதிராக அளிக்கப்பட்ட சாட்சியங்கள் அனைத்தும் சில சூழ்ச்சிகளால் ஜோடிக்கப்பட்டன எனவும், முழுக்க முழுக்க சந்தேகத்தின் பேரிலேயே வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், மேலும் லட்சுமிகாந்தனைக் கொலை செய்யப் படுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்ற கத்தியைக் கொண்டு ஒரு எலியைக்கூட வெட்ட முடியாது என தனது திறமையான வாதங்களை முன்வைத்தார் வி.எல்.எத்திராஜ். நீண்ட ஆலோசனைகளுக்கும், விவாதங்களுக்கும் பிறகு இருநபர் நீதிபதி குழு, இருவரையும் விடுதலை செய்வதாகத் தீர்ப்பளித்தது. இந்தியா சுதந்திரமடைவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு வழங்கப்பட்ட தீர்ப்பு அது.

எம்.கே.டி. சிறைவாசத்தில் இருந்த காலகட்டத்தில் வெளியான அவரது படமான ஹரிதாஸ் சென்னை பிராட்வேயில் மூன்று தீபாவளிகளைக் கடந்து ஓடி திரைத்துறையில் புதியதொரு வரலாற்றை ஏற்படுத்தியது. அப்படத்தில் இடம்பெற்றிருந்த "மன்மத லீலை" மற்றும் இதர பாடல்கள் காற்றில் கலந்து எல்லா இடங்களிலும் ஒலிக்க ஆரம்பித்தன. எம்.கே.டி.யின் சிறைவாசத்தையும், ஹரிதாஸ் படத்தின் வெற்றியையும் குறித்து அக்காலத்தில் பிரபலமாக இருந்த ஹொலிவுட் நடிகரும், பாடகரும், சமூக உரிமைப் பாதுகாவலராகவும் இயங்கி வந்த ஹரி பெல.்.போண்டா தன்னுடைய அறிக்கையொன்றில், "பாகவதரை சிறைப் பிடிக்கலாம் அவரது பாடல்களை சிறைப்பிடிக்க முடியுமா" என்று குறிப்பிட்டிருந்தார்.



லட்சுமிகாந்தன் கொலை வழக்கைப் பொறுத்தவரையில் உண்மைக் குற்றவாளிகள் யாரும் கண்டறியப்படாத நிலையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இருவரும் முப்பது மாத சிறைவாசத்திற்குப் பிறகு வெளிவந்தனர். இருவருக்கும் எதிராகப் போடப்பட்ட வழக்கை ஒரு வேதனையான, தவறான வழக்காக இந்திய நீதித்துறை தனது வரலாற்றில் பதிவு செய்து கொண்டது. அந்த முப்பது மாத கால இடைவெளியில், இந்திய அரசியலிலும் சரி, திரைத்துறையிலும் சரி நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. வழக்கமாக வரலாற்றையும், இறை சார்ந்த விஷயங்களையும் சார்ந்து எடுக்கப்பட்ட படங்கள் தோல்வியடைந்து, சமூகம் சார்ந்த விஷயங்களை உள்ளடக்கிய படங்கள் வெற்றி பெற ஆரம்பித்தன.

எம்.கே.டி.யின் முப்பது மாத சிறைவாசம் அவரை நிறைய பக்குவப்படுத்தியிருந்தது. அவரிடமிருந்த மிதமிஞ்சிய சந்தோஷத்தையும், அளவுக்கதிகமான தன்னம்பிக்கையும் கொள்ளையடிக்கப்பட்டு விட்ட நிலையில் அவர் ஒரு தத்துவஞானியாக உருமாறிவிட்டிருந்தார். அச்சமயத்தில், "பணம், புகழ், அந்தஸ்து" ஆகிய விஷயங்கள் எவ்வளவு அருவருப்பானவை என்பதை உணர்ந்துவிட்டிருந்தார். எம்.கே.டி. - என்.எஸ்.கே. இருவரும் நெருங்கிய நண்பர்களாக இருந்த போதிலும் கூட கொள்கையளவில் இருவரும் வேறுபட்டே இருந்தனர். இறை சார்ந்த விஷயங்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராக எம்.கே.டி. திகழ, என்.எஸ்.கே.வோ திராவிடர் கழகம் கொண்டு வந்த சுயமரியாதை இயக்கத்தின் மீது தீவிரப் பற்றுடையவராகத் திகழ்ந்தார். பிறகு சென்னையிலிருந்து திருச்சிக்கு வந்தார் எம்.கே.டி. பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் கூட்டத்துக்கு மத்தியில் சில தயாரிப்பாளர்களும் தங்கள் படத்தில் அவரை நடிக்க வைப்பதற்காகத் தங்கள் கைகளில் பணப்பெட்டியுடன் காத்திருந்தனர். ஆனால் எந்தவொரு திரைப்பட ஒப்பந்தத்திலும் அவர் கையெழுத்திடவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, திரைப்படத்துறையை விட்டு விலகி நிறைய கச்சேரிகள் செய்ய அவர் விரும்பினார். மற்றொன்று, அவர் சிறை செல்வதற்கு முன்பு நடிப்பதற்காக வாங்கியிருந்த முன்பணத்தை (சிறை செல்வதற்கு முன்பு 12 படங்களில் நடிப்பதற்காக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தார் எம்.கே.டி.) அவர் சிறையிலிருந்த போது திருப்பித் தரச் சொல்லிக் கேட்டு ஒரு இக்கட்டான பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தித் தந்ததோடு, எம்.கே.டி.யும் - என்.எஸ்.கே.யும் இனி ஜெயிலில் இருந்து வெளிவர மாட்டார்கள், அவர்கள் தங்களது எஞ்சிய வாழ்நாளை அந்தமான் சிறையில்தான் கழிக்கப் போகிறார்கள் என வீண் வதந்திகளைப் பரப்பிய தயாரிப்பாளர்களிடமிருந்து சற்று விலகியிருக்க விரும்பினார்.

(தொடரும்)

---

▼ அவுஸ்ரேலியா கண்டத்தில் முதன் முதலில் காலடிவைத்து கண்டுபிடித்தவர் கப்டன் ஜேம்ஸ் குக் என்று நாம் படித்திருக்கிறோம். ஆனால் 16ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே மனிதன் அவுஸ்ரேலியாவில் தடம்பதித்த விவரம் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியாவின் கிழக்கு கடற்கரையில் 28 வயதிலிருந்து 60 வயதுக்கு உட்பட்டு மதிக்கத்தக்க வெள்ளையரான ஆண் ஒருவரின் எலும்புக்கூட்டை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது சம்பந்தமான ஆராய்ச்சி தொடர்வதாக அவுஸ்ரேலியாவின் தேசியப் பல்கலைக்கழக பேராசிரியர் ஸ்டீவர்ட் .்.பலோன் கூறியதாக "டெய்லி ரெலிகிரா.்.ப்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

## சின்ன சின்ன...




▼ மொகஞ்சதாரோ, ஹரப்பா புதைபொருள் ஆராய்ச்சி பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தப் புதைபொருள் ஆராய்ச்சி முதன் முதலில் எப்படி நிகழ்ந்தது? சில நூற்றாண்டுகளுக்கு முன்னர், ஓர் இத்தாலி இளவரசன் அரண்மனைத் தோட்டத்தில் நீருக்காக கிணறு ஒன்றைத் தோண்டினான். அப்போது தற்செயலாக அந்த நிலத்தினடியில் புதைந்து போயிருந்த ஒரு நகரம் வெளிப்பட்டது. உலகத்தில் புதைபொருள் ஆராய்ச்சியைத் தூண்டிய முதல் நிகழ்வு இதுதான்...

▼ சந்திரனில் ஒரு பூங்காவை நிர்மாணிக்க அமெரிக்க சட்ட வல்லுநர்கள் திட்டத்தை வகுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். அப்போலோ விண்கலம் இறங்குவதற்கு வசதியாக வரலாற்று சிறப்புமிக்க பூங்காவை ஏற்படுத்த விண்வெளி ஆராய்ச்சிக் குழுவிடம் சட்ட முன்மொழிவினை தாக்கல் செய்யவும் உள்ளனர். அமெரிக்க விண்கலங்கள் சந்திரனில் பாதுகாப்பாக இறங்கமுடியும் என அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதுவதன் அடிப்படையிலேயே இத்திட்டம் உருவாகியிருக்கிறது.

▼ காற்றின் உதவியால் அதிக மின்சாரம் தயாரித்துத் தரும் உலகின் மிகப் பெரிய இரண்டு காற்றாடிகள் ஜேர்மனி நாட்டிலுள்ள எம்டன் நகரில் இருக்கின்றன. இங்குள்ள ஒரு காற்றாடி மூலம் காற்றின் உதவியால் 4500 கிலோ வாட் மின்சாரத்தைத் தயாரிக்க முடியும்.

▼ உலகின் மிகப் பெரிய கலங்கரை விளக்கம் ஜப்பானின் யோகோமா நகரில் உள்ள யமஹிடா பூங்காவில் இருக்கிறது. இந்தக் கலங்கரை விளக்கத்தின் பெயர் ஸ்டீல் மரைன் டவர். இதன் உயரம் 343 அடி. இந்தக் கலங்கரை விளக்கத்தின் ஒளியை 32 கி.மீ. தொலைவிற்கு அப்பால் இருந்தும் பார்க்க முடியும்.

▼ தாஜ்மகால் எழுப்பப்பட்டதும் அதைப் பராமரிக்க ரூபா 3 இலட்சம் தொகையுடன் ஒரு திணைக்களம் அமைக்கப்பட்டது. ஆக்ரா மாவட்டத்திலுள்ள 30 கிராமங்களிலிருந்து இதற்கான தொகை திரட்டப்பட்டதாம்.

▼ லெனின் இறந்ததும் அவரது உடலை ரயில் மூலம் மொஸ்கோவுக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. மக்களோ தண்டவாளத்தில் அமர்ந்து அழுதபடி இருந்தனர். எவ்வளவு சொல்லியும் அந்த இடத்தைவிட்டு அவர்கள் எழவில்லை. முடிவில் எஞ்சின் ட்ரைவர் கீழே இறங்கிவந்தார். மக்களிடம் சென்று, "தோழர் லெனின் இந்த எஞ்சினுக்கும் கௌரவ ட்ரைவராக இருந்தார். ஒருபோதும் நேரம் தவறுவதில்லை என்று லெனினுக்கு வாக்குக் கொடுத்தேன். இந்த ரயில் ஒருமணிக்கு மொஸ்கோவில் இருக்க வேண்டுமென்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. கொடுத்த வாக்கை காப்பாற்ற எனக்கு உதவுங்கள்..." என்று கூறியபடி அழத் தொடங்கினார். மக்களும் அழுதபடி வழிவிட்டு ஒதுங்கினார்கள் என்பது வரலாறு.

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# வங்கி அடகு நகை சேவையில் மாற்றம் தேவை

இக் கோரிக்கை நடைமுறைக்குச் சாத்தியப்படுமா?......இல்லையா... என்பது வங்கியாளர்கள் எடுக்கும் முடிவில் தங்கியுள்ளது. ஆனால் மக்களின் மனதில் உள்ள ஆதங் கத்தை வெளிப்படுத்துவது ஒரு சமூகப்பத்திரிகையின் கடமை யல்லவா!...அந்தவகையில் தொடர்கின்றது மக்களின் கோரிக்கை.

அண்மைக் காலங்களில் நடந்த சில வங்கி மோசடிகளால் வாடிககை யாளர்களின் பக்கத்தில் வங்கி தொடர்பான சில நம்பகத்தன்மைகள் ஏற்பட்டுள்ளது. இது சிலரது செயற் பாடுகளால் நடந்த துன்பியல் நிகழ்வுகள். இது ஒருபுறமிருக்க வங்கி நடைமுறைகளில் சில மாற்றத்தைக் கொண்டு வரவேண்டி யது இன்றைய கட்டாய தேவையாக உள்ளது. குறிப்பாக அடகுச்சேவை களில் பாரிய குறைபாடுள்ளது. அதாவது பொருளொன்று அடகு வைக்கும் போது அதன் தரம் கணிக்கப்படுகின்றது, நிறை கணிக்கப்படுகின்றது. அதே பொருளை வாடிக்கையாளர்கள் மீளப்பெறும்போது தரத்தைக்கணிப் பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை வெளிக்கடைகளில் கொண்டு சென்று தரம் கணிக்கமுடியாத நிலையுள்ளது காரணம் உடனடியாக பொருள் பெற்றுக்கொண்டவுடன் கையொப் பம் வாங்கப்படுகின்றது. இப்பிரச் சினையைத் தீர்ப்பதில் சிக்கல்கள் இருப்பினும் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையென்பது உண்மை. முன்பு நடந்த மோசடிகள் உடனடியாக அம்பலத்திற்கு வராமைக்கு என்ன காரணம் தெரியுமா? எடுக்கப்பட்ட நகைகளை வாடிக்கையாளர் உடனடியாக தரம் கணிக்கவில்லை கணித் திருந்தால் போன நகையை மீட்டிரா விட்டாலும் தொடர்ந்து போன மோசடிகளைத் தடுத்துமிருக்கலாம். பெரும்பாலும் நகைகளை விற்க வேண்டிய தேவை வரும்போது மாத்திரமே வாடிக்கையாளர்கள் தரம் கணிப்பார்கள். அப்போது தான் மோசடி நடந்தமையே வாடிக்கை யாளர்களிற்குத் தெரியவரும். இதனை சாதகமாகப் பயன்படுத்தியே மோசடிக் கும்பல்கள் நீண்டநாட்கள் மோசடி செய்கின்றனர் நகைகளைப் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்திக் கையொப்பம் உடன் இடவேண்டுமெனக் கோரும் வங்கிகள் நகையின் தரத்தை மீள் பரிசோதனையை வாடிக்கையாளர்கள் செய்ய வேண்டு மென சிந்தித்து நடைமுறையை உருவாக்க முன்வரவில்லை

**வங்கிகளில் எப்படி மோசடிகள் நடந்தது**

அடகு வைத்த நகைகளை திருடிய வங்கி ஊழியர்களில் ஒருவர் போலிக்கவரிங் நகைகளைக் கண்டுபிடிக்கமுடியாத வகையில் மாதிரிகளாகச் செய்து உரிய இடத்தில் வைத்தார். காலம் கைகூடும்போது வந்த வாடிக்கை யாளர்கள் கடனை அடைத்து கையில் பொருளைப் பெற்றும்கூட மாற்று நகை என்பதை இனம்காண முடியவில்லை. இதன் மத்தியில் எப்படி வங்கியை மக்கள் நம்புவது. பல துன்பங்கள் துயரங்கள் மத்தியில் சிறுகச் சிறுக சேமித்த பணத்தில் செய்த உடமைகள் இவை. இவ் வாறான மோசடிக்குள் சிக்கி சின்னா பின்னமாவதை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இதில் மாற்றம் கோருவது நியாயமானதே. மக்கள் மனமறிந்த வங்கிகள் என்பார்கள். ஏன் இது வரை மக்கள் மனங்களை உணர்ந்து தொழிற்பட வில்லை?.....நகைகள் மட்டுமா மோசடியாகின்றது காசோலைகள், ஓடி முறமைகள் என இன்னும் பல....

**மாற்று வழியென்ன?....**

இலத்திரனியல் சாதன வளர்ச்சி பாரியளவு ஏற்பட்டு விட்டது. நகையின் தரத்தை சுயமாக வாடிக்கையாளர் கணிப்பிடும் கருவிகள் உலகளாவிய ரீதியில் வந்துவிட்டது. இதனை வங்கிகள் கொள்வனவு செய்து ஏன்பொருத்த முடியாமல் உள்ளது. இது தொடர் பாக வங்கியதிகாரிகள் அதிக கவனமெடுத்து தீர்வுகாண வேண்டும். இல்லையேல் மக்களிற்கு வங்கியில் நம்பிக்கையில்லாத் தன்மை அதிகரிக்கும் என்பதுடன், மக்களின் உடமைகளும் சூறையாடப்படும் என்பது திண்ணம்.

தற்கால உலகில் எதிலுமே நம்பிக்கையற்ற தன்மை நின்று நிழலாடுகின்றது. பொய், புரளி, கொள்ளை, கொலை, சுத்து மாத்துக்களென சூதுவாது நிறைந்த பூமியாக எமது தேசம் மாறிவிட்டது. உழைப்பில்லை, ஊதியத்திற்கேற்ற வருவாயில்லையென்று அங்கலாய்ப் பது ஒரு புறமிருக்க சேமித்த உடமைகளைக்கூட பாதுகாக்கமுடி யாதநிலை மறுபுறம் இருக்கின்றது. முள்ளிவாய்க்காலில் முடங்கிப்போன பல கதைகளால் தமிழ் மக்களின் சொத்துடமை வெறும் சொற்பனங் களானது. தற்போது தான் சிறுகச்சிறுக சேமித்து சீவியத்தை நடாத்தும் போது இப்படிப்பட்ட மோசடிகள் மீண்டும் தமிழர்களைத் துண்டாடு கின்றது. இதைத்தமிழர்களே தீர்க்கவில்லையானால் யாரிடம் இம்மக்கள் கையேந்துவது?....

**மத்திய வங்கியறிக்கை மக்களை தகிலடைய வைத்தது**

கடந்த சில நாடகளிற்குமுன் வங்கி தொடர்பாக விளம்பரம் கொடுத்த மத்திய வங்கி இறுதியில் சிறிய எழுத்துக்களால் இந்த வங்கிகளில் வைப்புச்செய்யும் பணத்தில் இரண்டு இலட்சத்திற்கு மாத்திரமே நாம் வகை கூறமுடியுமென அறிவித்துள்ளது. இதில் தற்போது மத்திய வங்கிக்குக் கீழ் இயங்கும் அரச தனியார் வங்கி கள் அனைத்தும் உள்ளடங்குகின்றன. இது நம்பகத்தன்மையை மேலும் உரமூட்டுகின்றது. ஆகவே இந்நடை முறையில் வங்கிக்கு நட்டத்தை ஏற்படுத்தும் மோசடிகளில் கவனம் செலுத்தும் வங்கிகள் மக்களிற்கு நட் டத்தை ஏற்படுத்தும் மோசடிகளிலும் கவனம் செலுத்த வேண்டு மென்று கோரி மாற்றத்தை எதிர்பார்த்து மக்கள் சார்பாக விடை பெறுகின்றோம்.

வெண்கட்டியன்



## புதிர்ப்போட்டி 54

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

**புதிர்ப்போட்டி 54 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 24.08.2013**

## விடுகதைகள்

1) வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதை சமைத்தான். பின் வெளியே உள்ளதை சாப்பிட்டு விட்டு உள்ளே உள்ளதை எறிந்தான் அது என்ன?

2) முழு உலகமும் சுற்றி வரும் ஆனால் ஒரு மூலை யிலேயே இருக்கும் அது என்ன?

3) மேலிலும் துவாரம், கீழிலும் துவாரம். வலதிலும் துவாரம், இடதிலும் துவாரம், உள்ளிலும் துவாரம், வெளியிலும் துவாரம் இருந்தும் நீஜர என்னுள் சேமித்து வைப்பேன். நான் யார்?


4) ஆகாரமாக எதையும் தந்தால் சாப்பிடுவேன், ஆனால் நீரைக் குடிக்க தந்தால் இறந்து விடுவேன் நான் யார்?

5) கண்டி பிடித்தவனும் வைத்திருக்கவில்லை. வாங்கிய வனும் உபயோகிக்கவில்லை, உபயோகிப்பவனுக்கு அதனைப் பற்றி எதுவும் தெரியாது அது என்ன?

6) ஒரு குற்றத்தைச் செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு, ஆனால் குற்றத்தைச் செய்தால் தண்டிக்க முடியாது அக் குற்றம் என்ன?

7) 3 முட்டையிடும், குஞ்சு பொரிக்காது கூட்டில் குடி யிருக்கும், கூடு கட்டத் தெரியாது. குரலில் இனிமை யுண்டு, சங்கீதம் தெரியாது - அது என்ன?

## உருவைப் பூர்த்தி செய்ய பொருத்தமான பகுதி எது?




## சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- ம.யோதீஸ்வரன்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர் :-யோ.தனுசன்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர் :- வி.நிலேக்கா
பாடசாலை:- யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

## புதிர்ப்போட்டி 53 இற்கான விடை எழுதி பரிசு பெறுவோர்

பெயர் :- சி.தேனுஜன்
தரம் :- 11
பாடசாலை:- யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.



தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! புதிர்ப்போட்டி விடைகளுடன் உங்களது போட்டோப் பிரதி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப் பெயர் :- ..............................
பாடசாலையின் பெயர் ..............................
தரம் :- :- ..............................
தொலைபேசி இல.:- ..............................
முகவரி :- ..............................
..............................

# வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் வடமாகாண ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் திருமதி அவறில் ஜோன் ஹன்டர்சன் பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பு பிரதிநிதிகள் ஆகியோரை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி யாழ்ப்பாணத் திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று சந்தித்து கலந்துரையாடினார்.



இதில் நியூசிலாந்து உயர்ஸ் தானிகருடன் வடமாகாண அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடியதுடன் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாக ஆளுநர் எடுத்துரைத்தார். வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் பாலுற்பத்திச் செயற்றிட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



மேலும் பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பு பிரதிநிதிகளுடன் வடமாகாண தேர்தல் தொடர்பாக விரிவாக கலந்துரையாடியதுடன் இதில் பொதுநலவாய நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கான ஆலோசகரும், ஆசியா ஐரோப்பா நாடுகளுக்கான செயலாளருமான அம்னா ஜெஸ்ரி, பொதுநலவாய நாடுகளின் ஜனநாயக விவகாரங்களுக்கான தலைமை ஆலோசகர் மார்சின் கெசி ஆகியோரும் ஆளுநருடன் கலந்துரையாடினார்கள்.

ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

# வழிபாட்டுத் தலங்களில் ஒலிபெருக்கி; ஓசையை தணிக்குமாறு பணிப்பு

(வவுனியா)

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் மத வழிபாட்டுத் தலங்களில் ஒலி பெருக்கிகளின் ஓசையைத் தணித்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா அனைத்து மத வழிபாடுத் தலங்களுக்கும் அறிவித்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மத வழிபாட்டுத்தலங்களுக்கு வழங்கியுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் அதீத ஓசையுடன் ஒலிக்க விடப்படும் ஒலிபெருக்கிகளால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே இவ் விடயம் தொடர்பில் ஒவ்வொரு மத வழிபாட்டுத் தலங்களும் தத்தமது ஆள்புல எல்லைக்குள் அதாவது உட்பிரகார எல்லைக்குள் ஒலிக்க விடுவதற்கு அறிவித்தல் வழங்கப்பட்ட நிலையிலும் தொடர்ந்தும் அச் செயற்பாடு பின்பற்றப்படாத நிலை சில மதத்தலங்களில் காணப்படுகின்றது.

எனவே பொதுப்பரீட்சைகளான புலமைப்பரிசில் பரீட்சை, க. பொ. த சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களின கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் கூடிய கவனமெடுத்து தமது வழிபாட்டுத தலங்களில் ஒலிக்க விடப்படும் ஒலிபெருக்கிகளின் ஓசையை உட்பிரகாரத்தினுள் மாத்திரம் ஒலிக்க விடுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கற்பித்தலை வலுமிக்கதாக்க பெற்றோர் ஒத்துழைக்கவேண்டும்

## யூனியன் கல்லூரி அதிபர் வேண்டுகோள்

(தெல்லிப்பளை)

பெற்றோர் தமது பூரண ஒத்துழைப்பை அளித்தால் சவால்களை எளிதாக சமாளித்து கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை வலுமிக்கதாக மாற்ற முடியும் என யா/யூனியன் கல்லூரியின் அதிபர் இரத்தினகுமார் தெரிவித்தார்.

இரண்டாந் தவணையின் இறுதி நாள் தேர்ச்சி அறிக்கைகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பெற்றோர் மாணவர் மத்தியில் உரையாற்றும் போதே அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரியின் பிரதான மணி மண்டபத்தில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் தலைமை உரையாற்றிய அதிபர் தனக்கு வந்திருந்த இரண்டு அநாமதேய கடிதங்களை பெற்றோர், ஆசிரியர் மாணவர் மத்தியில் வாசித்துக் காட்டினார்.

அக்கடிதங்கள் தொடர்பில் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் விளக்கம் அளித்தார்.

தனக்கு எதிராக சுமத்தப்படும் இத்தகைய அநாகரிமான செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளவும் முற்றாக களைந்து கொள்ளவும் பெற்றோர் தம்மோடு இணைந்து செயற்பட வேண்டும். என்ற அபிலாசைகளையும் அதிபர் வெளியிட்டார்.

மாணவர்களின் தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்பட்டதோடு நிகழ்வு முடிவுற்றதும் மாணவர்களின் வினாத்தாள்கள் பெற்றோருக்குக் காண்பிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. (17)



யாழ். புதிய சோனகதெரு கிராமத்தில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு இலங்கை ஜமாத்தே இஸ்லாமிய ரமழான் உணவுப் பொதியை அமைப்பின் பிரதிநிதி வழங்குவதைக் காணலாம். (105)




## தேவைகளைக் கோரும் நாம் பாதைகளை ஏன் மறந்து விடுகின்றோம்

அரசியல்வாதிகளின் பேச்சுக்கள் பிரச்சாரங்கள் என்பவற்றுக்கு அப்பால் யதார்த்தத்தை கூறும் வாரம் ஒரு காரம் மக்களோடு மனம்விட்டுப் பேச விரும்புகிறது. அரசியல்வாதிகள் விடும் தவறுகளையும் கட்சிகள் விடும் தவறுகளையும் காரசாரமாக கொண்டுவரும் இக் காரம் மக்கள் விடும் தவறுகளையும் மனம் விட்டுப் பேசி மறுசீர் அமைக்க விரும்புகின்றது.

கடந்து வந்த காலங்களில் தமிழ் அரசியல்வாதிகள் என்ற பெயரில் நீண்ட காலமாக யாரிடம் எங்கள் தேவைகளை கோரிவந்தோம். அரசு சார்பான மக்களின் தேவைகள் யார் மூலம் ஓர்அளவிற்கேனும் நிறைவேற்றப்பட்டது. என என்றாவது சிந்தித்தோமா?... பொய்மைக்குள் மெய்மைகாண்பது தான் அரசியல். அந்த பொய்மைக்குள் ஓரளவுக்கேனும் மெய்மை கண்டு ஆங்காங்கே அபிவிருத்தி செய்து வந்த ஒரே ஒரு தமிழ் அரசியல் தலைமை என்று யாரை உங்களால் கூற முடியும்? வெறும் கோரிக்கைகளோடும் பிரச்சாரங்களோடும் இருந்த தமிழ்க் கூட்டமைப்பினால் எதிர்கோசம் போட்டு ஓர்மங்களை தூண்டிவிட்டு விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும் அழித்தார்களே தவிர எதை இவர்கள் அபிவிருத்தியென்றோ சமூகத்தின் முன்னேற்றம் என்றோ தமிழ் மக்களுக்குச் செய்தார்கள்? சரி... இது வரை செய்யவில்லை இனியாவது செய்வார்களா? என்று சிந்தித்தோமானால் நிச்சயம் அது நடக்காது என்று தெளிவாகத் தெரிகிறது. இதற்கு காரணம் அரசு இவர்களிடம் அதிகாரம் கொடுக்க என்றுமே விரும்பாது. அதிகாரங்களை சாதுரியமாக பெற்றெடுக்க அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளும் இவர்களில் அரங்கேறவில்லை ஆகவே இனிவரும் காலங்களிலும் இவர்களால் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முடியாது. தமிழ் மக்களின் அபிவிருத்தியை அரங்கேற்ற முடியாது. இனி நடக்க இருக்கின்ற செயற்பாடுகள் என்று பிரச்சாரப்படுத்தும் பித்தலாட்டங்களுக்கு செவி சாய்க்காது இதுவரை நடந்த அபிவிருத் திக்கு பின்னணியில் இருந்த அரசியல்தலைமை யார் என்று சிந்திப்பது மேன்மையானது.

தேவைகளை அரசியல்வாதிகளிடம் கோருகின்ற நாம் தேர்தலில் பாதைகளை மறந்து நடப்பது வேதனைக்குரிய ஒன்று ஆங்காங்கே அபிவிருத்தியை பெற்ற அத்தனை மக்களும் அதற்கு காரணமாக இருந்த அரசியல்வாதிகளை ஆதரிக்க முற்பட்டால் அர்த்தமற்ற அரசியல் பிரச்சாரங்களுக்குப் பின்னணியில் இருக்கும் அரசியல்வாதிகள் நிச்சயம் தூக்கி எறியப்படுவர். இதை மக்கள் தெளிவாக உணர்ந்து செயற்பட்டால் தேர்தலில் ஏற்படும் அரசியல் அரங்கேற்றத்தால் என்றுமே தவறுகள்.நடக்காது. தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு அரசியல்வாதி ஒரு கட்சி, தேவைகளை கோரிப் பெறுவதற்கு இன்னொரு அரசியல்வாதி இன்னொரு கட்சி – இது எந்தத் துருவத்தில் நியாயமானது.

பித்தலாட்ட அரசியல்கள் என்று தேர்தலை நாம் தூக்கி எறிய முடியாது. இது ஜனநாயக நாடு. வாக்களிப்பது ஒவ்வொருவரினதும் உரிமை வேறொரு தவறினையும் மக்களாகிய நாமிழைக்கின்றோம். பலருக்கு வாக்காளர் டாப்பில் பெயரில்லை. 30, 40 வயதுகளை தாண்டிய பின்னர் இலங்கையில் வாக்குரிமையை இழந்து வாக்களிக்காது வாழும் மக்கள் இன்னும் பலர் குடாநாட்டில் இருக்கின்றார்கள். இது நாம் இழைக்கும் மிகப் பெரிய தவறு. வாக்களிப்பு என்பது ஜனநாயக நாட்டில் ஒவ்வொருவரினதும் உரிமை என்பதற்கு அப்பால் எங்களது உரிமையை பிறிதொருவர் தப்பாக பயன்படுத்துவதற்கும் இடமளிக்கின்றோம்.

ஆகவே மக்களின் மனங்களில் மாற்றம் வேண்டும். அரசியல் அதிகாரங்கள் தான் எம்மை வாழ வைக்கும், எமது சந்ததிகளை வாழவைக்கும். ஒன்று, இதை நிர்ணயிக்கும் தேர்தலுக்கு பின் நிற்கக்கூடாது. இரண்டாவது, செய்வோம் எனக் கூறும் பிரச்சாரங்களுக்கு அப்பால் செய்து முடித்த அரசியல்வாதிகளையும் கட்சிகளையும் நாம் இனங்காண வேண்டும். நன்றி கெட்ட தமிழினமாக நாம் தலை குனியக் கூடாது. எங்களை வாழ வைக்கக் கூடிய – ஆபத்துகளின் போதும் ஓடிவிடாமல் நம்முடனேயே இருந்த – துணிச்சல்மிகு தலைமைக்கும் அவர் பின்னணியில் இருக்கும் கட்சிக்கும் வாக்களிப்பதே இன்றைய கட்டாய தேவையாகும். வட மாகாணசபை ஆட்சி முறை அதிகாரங்கள் மூலம் எதையும் பெற்றெடுக்க முடியாது. என்று கூறும் கட்சிக்கும் அரசியல்வாதிகளுக்கும் அந்த அதிகாரங்களைக் கொடுத்து என்ன பயன்? அன்று அதிகாரப்பகிர்வு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்குச் செல்ல மறுத்தவர்கள் இன்று அத்தனையையும் சாதிப்போமாம்... எனக் கூறும் வார்த்தைகள் வெறும் பித்தலாட்ட பிரச்சாரம் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

– வெண்கட்டியன்

# இருமொழிகளில் அடையாளஅட்டை ஆறுமாதங்களில் கிடைக்கும்

## ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் ஆறு மாதங்களுக்குள் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் அறிவித்துள்ளார்.

அத்துடன் மூன்று வருடங்களுக்குப் பின்னர் தேசிய மொழிகள் இரண்டிலும் இணை மொழியான ஆங்கிலத்திலும் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

தமிழ் மொழியை புறக்கணித்து விட்டு சகல சிங்களவர்களுக்கும் தனிச்சிங்களத்தில் மட்டும் அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பதை எதிர்த்து 18 வயதான சிங்கள இளைஞர் ஒருவர் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.மும்மொழிகளிலும் இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துவருவதாக பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சவிந்தரா பெர்னாண்டோ உயர் நீதிமன்றத்தில் கடந்த ஜூன் 20 வியாழக்கிழமையன்று தெரிவித்திருந்தார்.

சகல சிங்களவர்களுக்கும் தனிச்சிங்களத்தில் மட்டும் அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பது இனங்காணுதல் என்னும் நோக்கத்தை மறுப்பதாக உள்ளது என்றும் அவர் தனது அடிப்படை உரிமை மீறல் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ், நிர்வாக மொழியாகவுள்ள வடக்கு-கிழக்கு பிராந்தியங்களில் வாழ்தல், வேலைசெய்தல் அல்லது அங்கு போய் வருதல் என்பவற்றை கருத்தில் எடுப்பதைக்கூட இது தடுத்துள்ளது என்றும் மனுதாரரான ஏ.பி.தனஞ்சய குருகே தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களான சலீம் மர்சூப், பிரியசத் டெப் ஆகியோர் முன்னிலையில் ஜூன் மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

சிங்கள இன மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல அடையாள அட்டைகளிலும் உள்ள விபரங்கள் தனிச்சிங்களத்தில் மட்டுமே உள்ளன.

இவை அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய உத்தியோக,தேசிய மற்றும் நிர்வாக மொழிகள் இல்லை.

அரசியலமைப்பின் 18 ஆவது,19 ஆவது உறுப்புரைகளின் பிரகாரம் சிங்களமும் தமிழும் இலங்கையின் தேசிய மொழிகளாகும். உறுப்புரை 22 வடக்கு கிழக்கில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, தேசிய அடையாள அட்டையில் சிங்கள மொழியில் மட்டும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமையானது தனது அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மனுமீதான விசாரணை நேற்றுமுன்தினம் விசாரணையின் போதே பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சவிந்தரா பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார். இதனையடுத்து இந்த வழக்கு ஆகஸ்ட் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.நேற்று முன்தினம் மன்றில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் ஆறு மாதங்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்ததையடுத்து வழக்கு விசாரணை ஒக்டோபர் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

# பதிவு செய்யாத மருந்தகங்களுக்கு மருந்து வழங்கினால் அனுமதி இரத்து

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத தனியார் மருந்தகங்களுக்கு மருந்து விநியோகிக்கும் விநியோகஸ்தர்களின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யவுள்ளதாக வாசனைத் திரவியங்கள் மற்றும் தேசிய ஔடதங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இத்தகைய மருந்து விநியோகஸ்தர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.தரமான மருந்து வகைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் தனியார் மருந்தகங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருந்து வகைகளின் தரத்தைப் பேணுவது தொடர்பான பரிந்துரைகளை பின்பற்றத் தவறும் தனியார் மருந்தக உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் வாசனைத் திரவியங்கள் மற்றும் தேசிய ஔடதங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

# கிராமசேவையாளர்களுக்கான பரீட்சை முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

கிராம சேவையாளர் தெரிவுக்கென நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஸ்ப குமார தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 78 ஆயிரத்து 321 பரீட்சார்த்திகளுள் 25 ஆயிரம் பேர் நடத்தப்பட்ட மொழிகள் மற்றும் பொது அறிவு ஆகிய இரண்டு வினாத்தாள்களிலும் 40 இற்கு அதிகப்புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்திருப்பதாகவும் அவர் கூறினார். பொது நிர்வாக சேவைகள் அமைச்சினால் 331 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான கிராம சேவையாளர்களை தெரிவு செய்யும் முகமாகவே இப்போட்டி பரீட்சை நடத்தப்பட்டது.

சித்தியடைந்தவர்களுள் 8 ஆயிரத்து 360 பேரின் பெயர்கள் நேர்முகப் பரீட்சைக்காக பரீட்சைகள் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகவும் ஆணையாளர் நாயகம் கூறினார்.

# மக்களை தவறாக வழிநடத்தும் செய்திகளை வெளியிட்டது யார்?

## அறிக்கையிடுமாறு கம்பகா நீதவான் உத்தரவு

(கொழும்பு)

தான் அன்று உத்தரவிடாதவற்றை கூறி மக்களை தவறாக வழிநடத்தியது யாரென்பதனை தேடியறிந்து அறிக்கையிடுமாறு கம்பகா பிரதான நீதவான் டிகிரி ஜயதிலக்க உத்தரவிட்டுள்ளார்.

அத்தனகல உதவி பொலிஸ் அதிகாரி ஜயலத் பலகல்லவிற்கே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார். சுத்தமான தண்ணீர் கேட்டு வெலிவேரிய மக்கள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பிலான வழக்கு விசாரணை கம்பகா பிரதான நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

வெலிவேரிய மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புடைய தொழிற்சாலைகளை மூடிவிடுமாறு தன்னிடம் கோரியதாகவும் அதனை தான் நிராகரித்துவிட்டதாகவும் பொலிஸார் மக்கள் முன்னிலையில் தெரிவித்தமை யூ டியூப் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

நான் அவ்வாறு உத்தரவிடாத நிலையில் மக்களை தவறாக வழிநடத்தியது யாரென்பதனை தேடியறிந்து அறிக்கையிடுமாறு கம்பகா பிரதான நீதவான் டிகிரி ஜயதிலக்க அத்தனகல உதவிப் பொலிஸ் அதிகாரி ஜயலத் பலகல்லவிற்கு உத்தரவிட்டார். யூ டியூப் சமூக வலைத்தளத்தை பார்வையிட்டு பத்திரிகைகளை பார்வையிட்டு நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுமாறும் நீதவான் உதவிப் பொலிஸ் அதிகாரியிடம் கோரியுள்ளார்.

இந்நிலையில் மன்றில் சாட்சியமளித்த உதவிப் பொலிஸ் அதிகாரி வெலிவேரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் குறித்து ஆரம்பத்திலிருந்து இறுதிவரை சம்பவங்களை மன்றில் தெளிவுபடுத்தினார்.

இராணுவ படையணிகளுக்கான தளபதி பிரிகேடியர் தேசபிரிய குணவர்தன அவருடன் பொலிஸ் அதிகாரியுடன் ஆகஸ்ட் முதலாம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விபரித்துள்ளார்.எதிர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கொழும்பு-கண்டி வீதியிலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரிகேடியர் குணவர்தன பொலிஸ் அதிகாரியிடம் கூறியிருக்கின்றார்.

அன்று ஆகஸ்ட் முதலாம் திகதி கல், மண் மற்றும் போத்தல்களினால் தாக்கினர். மக்கள் குழுமியிருந்த பக்கம் துப்பாக்கிச் சத்தமும் கேட்டது. கண்ணீர் புகைக்குண்டு மற்றும் தண்ணீரும் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. கூட்டத்தை கலைப்பதற்கு இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்தனர் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த வழக்கு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது



07.08.2013 அன்றுமுள்ளியவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற தாய்ப்பால் மேம்பாட்டு விழிப்புணர்வு ஊர்வலம்..

(125)

# மடு திருவிழாவை முன்னிட்டு பாதுகாப்பு அதிகரிப்பு

மன்னார் மடு மாதா திருத்தலத்தின் ஆவணி மாத திரு விழாவையொட்டி தற்போது மடுப் பிரதேசத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மடுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மடு மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், மன்னார் மடு மாதா திருத்தலத்தின் வருடாந்தத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக பக்தர்கள் வருகைதந்த வண்ணமுள்ளனர். இவ்வாறு வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்புக் கருதி விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மேலும், வாகன சாரதிகளும் பொலிஸாரின் நிபநதனைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வகையில் மடு திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வரும் பக்தர்களை அழைத்துவரும் வாகன சாரதிகள் மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்தக் கூடாதென்பதுடன், அதிகளவான பயணிகளையோ அல்லது பொருட்களையோ வாகனங்களில் ஏற்றக்கூடாதெனவும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன், போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் வாகனங்களை நிறுத்தக்கூடாதென்பதுடன், பழுதடைந்த வாகனங்களை பயன்படுத்தக் கூடாதெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# சட்டவிரோத புகலிட பயணம் யாழ். வாசிகள் 36பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக புகலிடம் கோரிச் செல்வதற்கு தயாராக இருந்ததாகக் கூறப்படும் 36 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இராகம, குருகுலவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விடுதியொன்றில் தங்கியிருந்த போதே நேற்று முன்தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.21 ஆண்களையும் 3 பெண்களையும் 10 சிறுவர்களையும் கைதுசெய்துள்ளதாகவும் இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் கூறினர்.

27. அதிகளவு வட்டங்களை கொண்ட வடிவம் எது?


1. 
2. 
3. 

❖ **பின்வரும் வினாக்களில் தரப்படட கூற்றுக்கள் எப்பொழுதும் உண்மையானவை எனின் ( ✓ ) எனவும் சில வேளைகளில் உண்மையானவ எனின் ( ✗ ) எனவும் ஒருபோதும் உண்மையானதன்று எனின் ( ◯ ) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.**

28. பூமி சூரியனை சுற்றிக்கொண்டிருக்கும் ( )

29. பெப்ரவரி மாதம் 29 நாட்களைக் கொண்டது ( )

30. தாமரை மாலையில் மலரும் மலராகும் ( )

31. 8cm  4cm

தரப்பட்ட செவ்வகவடிவிலிருந்து ஒருபக்க நீளம் 2cm கொண்ட எத்தனை சதுரங்கள் பெறமுடியும்

1. 6 2. 12 3. 8

32.

| | | | |
|---|---|---|---|
| | △ | 3 | △ |
| + | 2 | □ | □ |
| | 6 | 4 | ◇ |

இப்பிரசினத்தின் படி □◇△ என்னும் எண்ணை எழுதவேண்டிய முறை?

1. 154 2. 125 3. 245

33. அழகிய, வண்ண, உயர்ந்த என்பன

1. வினைச்சொற்கள் 2. பெயர்ச் சொற்கள் 3. அடைமொழிகள்

34. எல்லையற்ற வான்பரப்பு என்பதால் கருதப்படுவது

1. கருமேகம் சூழ்ந்த வான்பரப்பு
2. அளவுகடந்த வான்பரப்பு
3. நீலநிற வான்பரப்பு

❖ **தரப்பட்ட எழுத்துக்களை பயன்படுத்தி பொருத்தமான சொற்களை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

தா, கு, ம், ம, ரை, டி, ள

35. நீர் நிலைகளில் ஒன்று ..........................


36. சூரியனின் வரவை கண்டதும் மலரும் மலர் ஒன்று? ............

37. பாம்பாட்டியின் இசைக்கருவி? ..................................

❖ **38 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

38. கோல அடிப்படையில் அடுத்து வரும் எண்ணை எழுதுக.

3241, 4352, 5463 ..........................

39.  இவ்வலங்கார வடிவத்தின் பெயர் யாது? ..................................

40. வெ. நே. பி சுருக்கக்குறியின் விரிவாக்கத்தை எழுதுக? ..................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு






❖ **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

01. திருத்தமான கருத்தைத்தரும் வாக்கியத்தை தெரிவு செய்க.
1. அரசாங்கம் புத்தகங்களை வழங்குகிறது உங்களுக்கு இலவசமாக
2. இலவசமாக புத்தகங்களை உங்களுக்கு வழங்குகிறது அரசாங்கம்
3. அரசாங்கம் உங்களுக்கு இலவசமாக புத்தகங்களை வழங்குகிறது



02. தரப்பட்ட நிகழ்வுகளில் எப்பொழுதும் நடைபெறக்கூடிய நிகழ்வை தெரிவு செய்க.
1. தாவரங்கள் வித்துக்கள் மூலமே இனம் பெருகுகின்றன.
2. நதிகள் யாவும் கடலை சென்றடைகின்றன.
3. இரவு வானில் சந்திரன் தோன்றும்

03. பிழையான கருத்து இடம்பெறும் வாக்கியத்தை தெரிவு செய்க.
1. முப்பதாவது ஒலிம்பிக்போட்டி இலண்டனில் நடைபெறவுள்ளது.
2. அதிகளவு உடுக்கோலங்களை கண்டறிந்தவர் நியூட்டன் ஆவார்.
3. மகாத்மாகாந்தியின் சுயசரிதை சத்தியசோதனையாகும்.

❖ **4ஆம்,5ஆம் வினாக்களில் தரப்பட்ட மூன்று உருக்களுக்கும் பொருத்தமான சொல்லை தெரிவு செய்க.**


04.   

1. தச்சன் 2. உபகரணம் 3. மின்சாரம்

05.   

1. மிருகம் 2. பொருளாதாரம் 3. முட்டை


06. எலி ஒன்று A என்ற இடத்தில் இருந்து B என்ற இடத்துக்கு சென்ற பயணப்பாதை கீழே தரப்பட்டுள்ளது.

A  B

எலி எத்தனை தடவைகள் வலப்பக்கம் திரும்பியுள்ளது.


1. 4 தடவைகள் 2. 5 தடவைகள் 3. 6 தடவைகள்

07. கீழேயுள்ள துண்டுகளில் மூன்றை மாத்திரம் பயன்படுத்தி ஒரு முக்கோணத்தை அமைக்கலாம். முக்கோணத்தை அமைக்கக்கூடிய மூன்று பகுதிகளையும் குறிப்பிடும் எழுத்துக்களும் எவை?




1. A, B, D
2. B, E, F
3. C, D, F

08. இரண்டு படங்களிலும் வயலை உழுகின்ற இரண்டு காட்சிகள் காட்டப்பட்டுள்ளன இவற்றில்




1. A மட்டும் சரி
2. B மட்டும் சரி
3. A யும் B யும் சரி

09. 6 மனிதர்களுக்கு மைதானம் ஒன்றை துப்பரவு செய்வதற்கு நான்குநாட்கள் தேவை. அந்தமைதானத்தை துப்பரவு செய்வதற்கு 8 மனிதர்களுக்கு எத்தனை நாட்கள் தேவை?
1. 3 நாட்கள் 2. 4 நாட்கள் 3. 6 நாட்கள்


10. இரு எண்களின் கூட்டுத்தொகை 15 ஆகும். அவ்விரு எண்களுக்கும் இடையிலான வித்தியாசம் 9 எனின் அவ்விரு எண்களும் எவை?
1. 3, 12 2. 5, 10 3. 9, 6

சுமனிடம் கவிதைப்புத்தகங்களும், சமயப்புத்தகங்களும் உள்ளன. வாமனிடம் நாவல் புத்தகங்களும், கதைபுத்தகங்களும், கவிதைப்புத்தகங்களும் உள்ளன. ரமணியிடம் கவிதைப்புத்தகங்களும் நாவல்புத்தகங்களும் உள்ளன.

11. நாவல் புத்தகங்கள் யாரிடம் உள்ளன?
1. வாமன், சுமன் 2. ரமணி, சுமன் 3. வாமன், ரமணி

12. மூவரிடமும் உள்ள புத்தகம் எது?
1. கவிதை 2. நாவல் 3. சமயம்

❖ **13ஆம், 14ஆம் வினாக்களுக்கு பின்வரும் உருக்களையும் அவை குறிப்பிடும் விடயங்களையும் பயன்படுத்தி விடை எழுதுக.**







13.
1. பறவைகள் கூடுகள் நோக்கி சென்றன.
2. பறவைகள் நோக்கி வந்தார்கள் கூடுகள்.
3. பறவைகள் கூடுகள் நோக்கி பறந்தன.

14.
1. மாணவர்கள் பாடசாலை நோக்கி வந்தார்கள்
2. மாணவர்கள் வந்தார்கள் பாடசாலையை நோக்கி
3. மாணவர்கள் பாடசாலையை நோக்கி சென்றனர்.


❖ **முதலில் உள்ள வடிவத்துக்கு சமனாக அமையாத வடிவத்தை தரப்பட்ட விடைகளில் தெரிந்து கோடிடுக.**

15.



1. 2. 3. 4.

16.




1. 2. 3. 4.



17. சந்தைக்கு வடக்கே கோயில் உள்ளது. கோயிலுக்கு மேற்கே வங்கி உள்ளது. அதன்படி
1. வங்கிக்கு தென்மேற்கே சந்தை உள்ளது.
2. சந்தைக்கு வடக்கே வங்கி உள்ளது.
3. வங்கிக்கு தென்கிழக்கே சந்தை உள்ளது.


18. விடையாக 32 பெற செய்யவேண்டியது.
1. 17 ஐ இரண்டால் பெருக்குதல்.
2. 64 ஐ இரண்டால் வகுத்தல்.
3. 19 உடன் 12 ஐ கூட்டுதல்.

19.



அருகில் தரப்பட்ட கடிகாரமுகம் முகம்பார்க்கும் கண்ணாடியில் தெரியும் தோற்றமாகும். இக்கடிகாரமுகம் குறிக்கும் உண்மையான நேரத்தை தெரிவு செய்க.
1. 8மணி 30நிமிடம் 2. 4மணி 30நிமிடம் 3. 3மணி 30நிமிடம்

20.




இப்பாத்திரம் முழுமையாக நீரால் நிரப்பப்பட்டுள்ளது. A,B,C, என்பன சமஅளவான துவாரங்களாகும். இத்துவாரங்களூடாக ஒரே நேரத்தில் நீர் வெளியேற்றப்படுமாயின் எந்த துவாரத்தின் ஊடாக நீர் அதிக தூரத்துக்கு நீர் வீசப்படும்.
1. A 2. B 3. C

21. வரிசை ஒன்றில் இம்ரான் முன்னாலிருந்து 6வதாக நிற்கின்றான். பின்னால் இருந்து பார்க்கின்றபோது 5வதாக நிற்கின்றான் எனின் வரிசையில் எத்தனை பேர் நிற்கின்றனர்.
1. 11 பேர் 2. 10 பேர் 3. 12 பேர்


22. இரண்டு மடங்குபணம் ரேவதியிடம் உள்ளது. எங்கள் இருவரிடமும் உள்ள மொத்தப்பணம் 180 ரூபா எனின் ரேவதியிடம் உள்ள பணம் யாது?
1. 60ரூபா 2. 90 ரூபா 3. 120 ரூபா

8△4 = 4●3 இங்கு கணித செய்கைக்காக △ ● என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

23. △ இக்குறியீடு எதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது?
1. கூட்டல் 2. கழித்தல் 3. பெருக்கல்

24. ● இக்குறியீடு எதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது?
1. கூட்டல் 2. பெருக்கல் 3. வகுத்தல்

25.




பாத்திரத்தில் உள்ள நீரின் அளவு யாது?
1. 3*l* 250*ml* 2. 3*l* 500*ml* 3. 3*l* 750*ml*

26. பின்வரும் எண்வரிசைகளில் ஏறுவரிசையில் அமைந்த விடையை தெரிவு செய்க.
1. $\frac{1}{2}, \frac{1}{3}, \frac{1}{4}, \frac{1}{8}$ 2. 0.25, 0.75, 1.5, 0.5 3. 0.25, 0.5, 0.75, 1

# வெலிவேரிய தாக்குதல் சம்பவம்
# அரசிடம் கேட்கப்படும் 9 கேள்விகள்



வெலிவேரியாவில் இராணுவம் பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான முன்னாள் ராஜதந்திரிகள் உட்பட்ட இலங்கையர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்

இது தொடர்பில் அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்

ஐக்கிய நாடுகளின் முன்னாள பிரதிநிதிகளான தயான் ஜயதிலக்க தமாரா குணநாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க உட்பட்ட பலர் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்

வெலிவேரியாவுக்கான நீதி என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

குடிநீர் தொடர்பில் வெலிவேரியா மக்கள் நடத்திய போராட்டம் தொடர்பில் உள்ளூர் அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை

இதன் காரணமாகவே நிலைமை மோசமானதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் 9 கேள்விகள் இந்த இலங்கையர் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ளது

வெலிவேரிய சம்பவத்தின் போது இராணுவத்தை அழைத்தது யார்?

துப்பாக்கிச் சூட்டை நடத்துமாறு இராணுவத்துக்கு உத்தரவிட்டது யார்?, இராணுவத்தை அழைப்பதற்கு முன்னர் சட்டத்தை அமுல்படுத்துவோரின் உரிய செயற்பாடு இருந்ததா?

பிரச்சினையில் தலையிட்டதாக கூறப்படும் மூன்றாம் உள்ளூர் தரப்பு எது?

சம்பவத்தின் போது உத்தியோகபற்றற்ற ஊரடங்கு, மின்சாரத் தடை தொலைபேசி செயலிழப்பு போன்ற விடயங்களை யார் மேற்கொண்டார்கள்?

ஏன் பத்திரிகையாளர்கள் இலக்கு வைத்து தாக்கப்பட்டனர்?

இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினரின் செயற்பாட்டை இராணுவப்பேச்சாளர் நியாயப்படுத்தியுள்ளார். எனில் அரசாங்கத்தின் நிலைப்பாடும் அதுவா?

வெலிவேரிய போராட்டத்துக்கு அரசியல் குழு ஒன்றே காரணம் என்று பாதுகாப்பு அமைச்சு கூறுவது உண்மையானால் அதற்காக இராணுவத்தை பயன்படுத்துவது சரியான காரியமா?

பொதுமக்களுக்கு உண்மையை தெரிந்து கொள்ள வேண்டிய உரிமை இருக்கிறது எனவே வெலிவேரிய சம்பவத்தின போது எத்தனை பேர் கொல்லப்பட்டனர்? எத்தனை பேர் காயமடைந்தனர்? எத்தனை பேர் கைதுசெய்யப்பட்டனர்? எத்தனை பேர் காணாமற் போயினர்?

இந்தக் கேள்விகளுக்கு விடைகளை காணும் போதே ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் உரிமையுடன் வாழும் சூழல் ஏற்படும் என்று இலங்கையர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இளவரசிகள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜப்பான் மற்றும் தாய்லாந்து நாடுகளின் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று இந்த அரச குடும்பங்களைச் சேர்ந்த இளவரசிகள் இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இவர்கள் இருவரும் ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது இலங்கையுடனான இருநாட்டுக்கிடையிலுள்ள இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக உயர் அதிகாரிகளை இந்த இளவரசிகள் சந்தித்து கலந்துரையாடுவார்கள் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# இலங்கையில் வருடாந்தம் 56 ஆயிரம் குற்றச் செயல்கள்

இலங்கையில் வருடாந்தம் கொலை, பாலியல் வல்லுறவு, கொள்ளை போன்ற பிரதானமான குற்றச் செயல்கள் தொடர்பில் 56 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு வழிமுறைகளை பின்பற்றி வருடாந்தம் மக்களிடம் இருந்து 8 முதல் 9 பில்லியன் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

சமூகத்தில் ஒழுக்கம் சீர்குலைந்து போயுள்ளதால், இவ்வாறு குற்றச் செயல்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரட்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் பெயர் பெற்ற 43 ஆயிரத்து 723 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குற்றச்செயல்களில் இந்த நபர்களே ஈடுபட்டு வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டு மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக பிரஜைகள் பொலிஸ் சேவை என்ற பெயரில் விசேட பொலிஸ் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களைப் பங்குபெறச் செய்து இந்தத் திட்டம் முன் னெடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

## பாதுகாப்பற்ற முறையில் வாக்காளர் அட்டை அச்சீடு

### சந்தேகம் கொள்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

வாக்காளர் அட்டை அச்சிடுதல் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை அச்சீட்டுப் பணிகள் உரிய பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டை அச்சிடுதல தொடர்பில் பின்பற்றப்பட்டபட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளை அரசாங்க அச்சகம் பின்பற்றத் தவறியுள்ளது.

இந்த நிலைமை சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேர்தல் தொடர்பான சகல அதிகாரங்களும் தேர்தல் ஆணையாளருக்கே காணப்படுகின்றது என அமைச்சர தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

## மத்திய கிழக்கில் சித்திரவதை மற்றொரு பெண்ணும் நாடு திரும்பல்

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்கள் அங்குள்ளவர்களால் சொல்லொணாச் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு சித்திரவதைக்குள்ளானவர்கள் ஒருவரேனும் வாராந்தம இலங்கைக்கு வந்தவண்ணமே உள்ளனர்.

இந்த வரிசையில் கடந்த புதன்கிழமை மாத்தளை மடவள பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் மிகவும் சித்திரவதைக்குள்ளான நிலையில் இலங்கை திரும்பி மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள குறித்த தண்ணீர் குடிப்பதற்கு கூட அனுமதிக்கவில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் தனக்கான ஊதியத்தை 2 மாதங்களாகியும் வழங்காத நிலையில் ஊதியம் கேட்டபோது இரண்டு வருடங்கள வேலை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியதாகவும் தெரிவிக்கின்றார்.

### திருமணம் செய்த நிலையில்
## யாழ்.மாணவன், கேரள மாணவி பெண்கள் பொலிஸில் சரண்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அகதி மாணவர் ஒருவரும் கேரளாவைச் சேர்ந்த மாணவியும் ராமேஸ்வரத்தில் உள்ள பெண்கள் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்

19 வயதான ஸ்டெபி எங்கெஸ் என்ற மாணவியும் 20 வயதான கஜேந்திரன் என்ற மாணவனும் எம் ஜி ஆர் மருத்துவ பல்கலைக்கழக பல் மருத்துவ கல்லூரியில பயில்கின்றனர்

இந்தநிலையில் ஒருவரை ஒருவர் விரும்பிய நிலையில் இருவரும் அண்மையில் பழனி கோயிலில் வைத்து திருமணம் செய்து கொண்டனர்

எனினும் குறித்த மாணவியின் தந்தையான இராணுவ அதிகாரி தனது மகளைக் காணவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்

இதனையடுத்து தமது பெற்றோரால் பிரச்சினை ஏற்படும் என்ற அச்சத்திலேயே தாம் சரணடைந்ததாக கேரள மாணவி ராமேஸ்வரம் பெண் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

## போலி நாணயத்தாளுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

போலி நாணயத் தாள்களை அச்சிட்டு விநியோகித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு பேரை விளக் கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய போலி நாணய நோட்டுக்களை வைத்திருந்த ஒருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் போது போலி நாணய நோட்டுக்களை அச்சிட்டவரும் கைது செயயப்பட்டதுடன் அதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

சந்தேக நபர்கள் கிளிநொச்சி நீதவான் நீதி மன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.





புனித நோன்புப் பெருநாளை நேற்றைய தினம் முஸ்லிம்கள் கொண்டாடினர் யாழ்ப்பாணத்திலும் ஒஸ்மானியக் கல்லூரி மைதானத்தில் முஸ்லிம்கள் நோன்புப் பெருநாள் தொழுகையில் ஈடுபட்டதைக் காணலாம்.

# இந்திய தலைநகர் மீது தாக்குதல் நடக்கும் அபாயம்

## உளவுத்துறை எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவில் குறிப்பாக டில்லியில் மேலும் ஒரு பயங்கரவாத தாக்குதலை நடத்த பயங்கரவாத அமைப்புக்கள் திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து டில்லி பொலிஸார் உஷாராக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இது குறித்து உளவுத்துறை வெளியிட்டுள்ள தகவலில், டில்லி நகரில் மீண்டும் ஒரு தாக்குதல் நடத்திட சதித்திட்டம் போடப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டு மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் முக்கிய குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள ஜமாஉத்தவா அமைப்பின் தலைவர் ஹபீஸ் சையீது லஷ்கர் இ தொய்பா பயங்கர வாதிகளிடம் தாக்குதல் நடத்த கோரியுள்ளார்.

இதன்படி முக்கிய இடங்களில் தாக்குதல் நடத்தக்கூடும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வரும் சுதந்திர தினம் மற்றும் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆகியவற்றை சீர்குலைக்க இந்தத் தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதனால் டில்லி பொலிஸார் தயாராக வைக்கப்பட்டுள்ளனர். முக்கிய இடங்கள் கண்காணிக்கப்படுகிறது.

# ஆறு கிலோ நிறையுள்ள குழந்தை பிரசவித்தார் பிரிட்டன் பெண்



பிரிட்டனைச் சேர்ந்த 40 வயதுப் பெண் ஒருவர் சுகபிரசவத்தில் 6 கிலோவில் அழகான பெண் குழந்தையை பெற்றெடுத்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டு மருத்துவமனையில், ஆறு கிலோ எடையுள்ள குழந்தையை பெற்றெடுத்தவர் பிரிட்டனை சேர்ந்தவர் மரின், (வயது-40) இவர் தற்போது ஸ்பெயின் நாட்டில் வசிக்கிறார்.

கர்ப்பிணியான, மரினுக்கு, புதனன்று பிரசவ வலி ஏற்பட்டது. இதையடுத்து, டெனியா நகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வலி தெரியாமல் இருக்கும் ஊசி ஏதும் இவருக்கு போடப்படவில்லை. ஐந்து மணி நேரத்தில், அழகான, ஆறு கிலோ எடை கொண்ட, பெண் குழந்தையை, மரின் பெற்றெடுத்தார்.

இவருக்குப்பிரசவம் பார்த்த டாக்டர் சேவியர் ரியூஸ் குறிப்பிடுகையில், என்னுடைய, 40 ஆண்டு கால மருத்துவப் பணியில், இவ்வளவு பெரிய குழந்தையை பார்த்ததில்லை தற்போது தாயும், சேயும் நலமாக உள்ளனர், என்றார்.

# ஆஸி-செல்ல முயன்ற 49 ஈழத்தமிழர் கைது



(நாகப்பட்டினம்)

வேளாங்கண்ணியில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு அகதிகளாக செல்ல முயன்ற 49 ஈழத்தமிழ் அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கையில் இருந்து அகதிகளாக வந்த தமிழர்கள் தமிழகத்தில் உள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அவ்வப்போது முகாம்களில் இருந்து தப்பி ஆஸ்திரேலியா செல்ல முயற்சிக்கின்றனர். தற்போது வேளாங்கண்ணியில் இருந்து 49 பேர் படகு மூலமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றுள்ளனர். அவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட அவர்களிடம் நாகை குற்றப்பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சாப்பிடாமல் கூட இருக்க முடியும் மீசை இல்லாமல் இருக்க முடியாது

## உறுதியாக சொல்லும் அப்ரிடி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தீவிரவாதிகள் கடத்திச் சென்று குகையில் ஒருமாதம் அடைத்து வைத்துக் கொடுமைப் படுத்திய பின்னரும் தன் மீசையை மழிக்க மாட்டேன் என உறுதியோடு வாழ்கிறாராம் பாகிஸ்தானியர் ஒருவர்.

பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் வசித்து வரும் முகமது கான் அப்ரிடி, 48 வயது மனிதருக்கு மீசை தான் உயிரே.

தினமும் சுமார் அரை மணி நேரம் செலவழித்து தன் மீசை அழகைப் பாதுகாத்து வருகிறாராம் அப்ரிடி.

அப்ரிடியின் மீசை 30 ஹன்ச் நீளம் அதாவது 76செ.மீ குழந்தையைப் போல கண்ணும் கருத்துமாக கவனித்து வருகிறார் தனது மீசையை. பிரத்தியேக எண்ணெய்,ஷாம்பூ என மீசை பராமரிப்பிற்கு மட்டும் மாதம் ரூ 9000 செலவாகிறதாம்

மீசையினால் பிரபலமான இவருக்கு, கடந்த 2009ஆம் ஆண்டு தீவிரவாத கும்பல் ஒன்று மிரட்டல் கடிதம் ஒன்றை அனுப்பியது. அதில், மீசையை வெட்டுறியா... இல்ல உன்ன வெட்டட்டுமா? என்ற பாணியில் எச்சரிக்கை விடப்பட்டிருந்தது

ஆனால், இந்த மிரட்டல்களுக்கெல்லாம் பயந்தால், இவ்வளவு பெரிய மீசை வைத்திருந்தே பயனில்லை என அப்ரிடி நினைக்க, தீவிரவாத கும்பல் அவரைக் கடத்திச் சென்றது.

கிட்டத்தட்ட ஒரு மாத காலம் குகையில் அடைத்து வைத்து அப்ரிடியை கொடுமைப்படுத்திய தீவிரவாதிகள் பின்னர் அவரை விடுவித்து விட்டனர். விடுவிப்பதற்கு முன் மீசையை



வெட்டி விடுவதாக வாக்களித்தாராம் அப்ரிடி.

ஆனால்,தொடர்ந்து மீசையை வளர்த்து வரும் அப்ரிடி, தன் மீசை பற்றி இப்படிக் கூறுகிறார், எனது மீசையை நான் என்னுடைய அடையாளமாகக் கருதுகிறேன். இந்த மீசையால் என்னை நிறைய பேர் மதிக்கிறார்கள். இதனால் நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். என்னால் உணவு சாப்பிடாமல் கூட இருக்க முடியும் ஆனால் எனது மீசை இல்லாமல் இருக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

# சிக்கின் குனியாவுக்கு பயந்து கிராமத்தை விட்டுச் சென்ற மக்கள்


சிக்கின் குனியாவுக்குப் பயந்து கிராம மக்கள் ஊரை காலி செய்து காடு சென்று வழிபாடு செய்த சம்பவம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி மற்றும் அதன் சுற்றுப்புறக்கிராமங்களில் கடந்த சில மாதங்களாக சிக்கின் குனியா காய்ச்சலால் ஏராளமான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

ஏராளமானோர் வீடுகளிலேயே முடங்கினர். நோயிலிருந்து மக்கள் விடுபடவும், மழை பெய்து வறட்சி நீங்கவும் குருபரப்பள்ளி அருகே உள்ள கொல்லப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் ஊரை காலி செய்து விட்டு காட்டில் குடியேறி சிறப்பு வழிபாடு நடத்த முடிவு செய்தனர்.

அதன்படி, நேற்று முன்தினம் காலை தங்களது வீடுகளை பூட்டி விட்டு, வனப்பகுதிக்கு சென்றனர். அப்போது, சாமி சிலைகளையும் அலங்கரித்து தங்களுடன் எடுத்துச் சென்றனர்.

காட்டுக்குள் மாரியம்மனுக்கு பொங்கல் வைத்து வழிபட்டனர். தங்களது வளர்ப்புப் பிராணிகளான ஆடு, கோழி, நாய் ஆகியவற்றை தங்களுடன்



பிடித்துச் சென்றனர்.

இது தொடர்பாக ஊர் பெரியவர்கள் கூறும் போது, மக்களுக்கு பிணி மற்றும் வறட்சி ஏற்பட்டால் இவ்வாறு கிராம மக்கள் அனைவரும் கிராமத்தை விட்டு காலி செய்து வனப்பகுதிக்குச் சென்று மாரியம்மனுக்கு பொங்கலிட்டு வழிபடுவதை எங்களது மூதாதையர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். மூதாதையரை போன்று நாங்களும் இந்த வழிபாட்டினை மேற்கொண்டுள்ளோம் என்றனர்.

# தோல்லிப் பாதையை நோக்கி செல்கின்றது தீவிரவாதம்

## என்கிறார் ஒபாமா

அமெரிக்க தூதரகங்களை தகர்க்க தீவிரவாதிகள் 'அச்சுறுத்திவரும் நேரத்தில், பயங்கரவாத அமைப்பான அல்-கொய்தா



தோல்விப் பாதையை நோக்கிச் சென்று கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக சண்டையிடுவது அவசியம் என்று ஒபாமா கூறியுள்ளார்.

கலிபோர்னியாவில் பென்டெல்டன் முகாமில் 3 ஆயிரம் கடற்படை வீரர்கள் மத்தியில் பேசிய ஒபாமா இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியது அல்-கொய்தா இயக்கத்தைச் சேர்ந்த முக்கியத் தலைவர்கள் அழிக்கப்பட்டனர். ஆப்கன் மற்றும் பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் அல்-கொய்தா இயக்கம் தோல்விப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

# மன்மோகன் சிங்கை சந்திக்க விரும்புகிறார் நவாஸ்ஷெரீப்

(கோலாப்பூர்)

இந்திய வீரர்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் படுகொலை செய்த சம்பவத்தால் இந்தியாவில் கொதிப்பு ஏற்பட்டுள்ள பின்னணியில், பிரதமர் மன்மோகன் சிங்கை நியூயோர்க்கில் சந்திக்க விரும்புவதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்திய வீரர்கள் மீதும், நிலைகள் மீதும் பாகிஸ்தான் படையினர் தன்னிச்சையாக நடத்திய தாக்குதலால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. எல்லைப் பகுதியில் பதற்றம் நீடிக்கிறது. இதையடுத்து நிலை



மையை சுமூகமாக்கும் முயற்சிகளில் பாகிஸ்தான் அரசு இறங்கியுள்ளது.

குறிப்பாக பிரதமர் நவாஸ் ஷெரீப், இரு நாடுகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் இரு தரப்பும் அமைதி காக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய வீரர்கள் பலியாகியிருப்பது வருத்தம் தருகிறது.

இந்த சிக்கலான நேரத்தில் இரு நாடுகளும் போர்நிறுத்த உடன்படிக்கையை முறையாக கடைப்பிடிக்க வேண்டியது முக்கியமாகும். செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்திற்கு வரும் பிரதமர் மன்மோகன் சிங்கை நான் சந்தித்துப் பேச விரும்புகிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

ஆனால் நவாஸ் ஷெரீப்புடனான சந்திப்புக் குறித்து கருத்துக் கூற இந்திய வெளியுறவு அமைச்சகம் மறுத்து விட்டது.

# பால்மா வகைகளை பரிசோதிக்க சகல தகைமைகளும் எம்மிடம் உண்டு

## குற்றச்சாட்டுக்கு பதிலடிகொடுக்கிறது ஐ.ரி.ஐ.

(யாழ்ப்பாணம்)

இறக்குமதியாகும் பால்மாக்களில் அடங்கியுள்ள டீ.சீ.டீ எனும் நச்சு இரசாயனம் தொடர்பில் பரிசோதிப்பதற்குத் தேவையான அனைத்து ஆய்வுக்கூட வசதிகளும் இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ஐ.ரி.ஐ) உள்ளன என்று இந்நிறுவனம் அறிவித்துள்ளது.

டீ.சீ.டீ நச்சு இரசாயனம் தொடர்பில் பரிசோதிப்பதற்கான வசதிகள் இலங்கையில் இல்லை என்று ∴.பொன்டெரா நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்கு பதிலளிக்கும் வகையிலேயே இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளது.

∴.பொன்டெரா நிறுவனத்தின் செய்திக்கு தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள ஐ.ரி.ஐ நிறுவனம், 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மற்றும் நவம்பர் காலப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட ∴.பொன்டெரா நிறுவனத்தின் பால்மா உற்பத்திகள் இன்னமும் சந்தைகளில் விற்பனைக்காக உள்ளன என்றும் இவற்றிலேயே அதிகளவில் டீ.சீ.டீ நச்சு இரசாயனம் கலந்திருப்பதாக தெரியவந்துள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள பரிசோதனை நிலையங்களில் டீ.சீ.டீ நச்சு இரசாயனம் தொடர்பில் பரிசோதிப்பதற்கான வசதிகள் இல்லை என்று ∴.பொன்டெரா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றைப் பல்வேறு ஊடகங்களும் பிரசுரித்திருந்தன. ஐ.ரி.ஐ. நிறுவனம் மேற்படி இரசாயனம் தொடர்பில் நடத்திய பரிசோதனையை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்புக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள ஐ.ரி.ஐ நிறுவனம், கொழும்பில் உள்ள டீ.சீ.டீ பரிசோதனை மாத்திரமன்றி டீ.சீ.டீ பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மெலமைன் பரிசோதனைக்குரிய வசதிகளும் அவற்றை பரிசோதிப்பதற்கான விசேட உபகரணங்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற ஆய்வாளர்களும் தங்களது நிறுவனத்தில் காணப்படுகின்றனர் என்றும் ஐ.ரி.ஐ. நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பால்மாக்களில் டீ.சீ.டீ நச்சு இரசாயனம் கலந்திருப்பதாக தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து அவற்றைக் கண்டுபிடிப்பதற்காக சர்வதேச அளவில் பயன்படுத்தப்படும் இரு முறைமைகளில், ஒரு முறையினைக் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் உலகிலுள்ள எந்தவொரு விஞ்ஞானகூடமும் இந்த முறையினைக் கடைபபிடிக்க முடியும் என்றும் ஐ.ரி.ஐ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## இன்று கொடியேற்றம்

(கைதடி)

கைதடி மேற்கு இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பக்திபூர்வமாக திருவிழாக்கள் இடம்பெற்று இரதோற்சவம் மற்றும் தீர்த்த உற்சவத்துடன் மகோற்சவம் நிறைவடையும்.(130)

# “தலைவா” திரைப்படம் காண முண்டியடித்தனர் இரசிகர்கள்



இந்தியாவிலும் இலங்கையிலும் நேற்று வெளியான தலைவா திரைப்படத்தினைக் காண இரசிகர்கள் கூட்டம் நேற்று ராஜா திரையரங்க வாயிலில் கூடியதால் அப்பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது.

யாழ். ராஜா திரையரங்கின் வாயிலில் வைக்கப்பட்டிருந்த விஜயின் படத்திற்கு பாலாபிஷேகமும் இடம்பெற்றதுடன் மலர் மாலை அணிவித்து பாண்ட் வாத்தியத்துடன் இரசிகர் கூட்டம் அலைமோதியது. இதனால் ராஜா திரையரங்க வாயிற் பகுதியில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. இதற்கிடையில் இப்பகுதியில் பட்டாசுகள் கொளுத்தப்பட்டதால் பெரும் புகை மண்டலமாகவும் காணப்பட்டது.

திரையரங்கினுள் நுழைய முடியாத அளவிற்கு பெரும் சனக்கூட்டமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விஜய், அமலாபால் நடித்துள்ள மேற்படி “தலைவா” திரைப்படம் திட்டமிட்டபடி தமிழகத்தில் நேற்று வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வெடிகுண்டு மிரட்டல் காரணமாக படத்தை திரையிட தியேட்டர் உரிமையாளர்கள் தயங்கினர். இதனால் ரிலீஸ் திகதி ஒத்திவைக்கப்பட்டுள் ளது. இதனால் இரசிகர்கள்கடும் ஏமாற்றம் அடைந்தனர். (இ)

## வடக்கில்...

இதைப் பரிசீலனை செய்வதற்கே வியட்னாம் அதிகாரிகள் குழு வடக்கிற்கு வந்து கடல் வளங்களை ஆராய்ந்து கடல்வள அபிவிருத்திக்கு ஏதுவாக வடமாகாணத்தைத் தெரிவு செய்து அப்பகுதிகளில் இத் தொழில் நுட்பத்தைக்கொண்டு கடல்சார் தொழிலில் ஈடுபடுவோரின் உழைப்பை இலாபகரமாக மாற்றவுள்ளோம். கடலட்டை இனப் பெருக்கம், சிங்கறால் வளர்ப்பு, கடல்பாசி வளர்ப்பு போன்ற கடல் உயிரினங்கள் வளர்ப்பு சம்பந்தமான புதிய தொழில்நுட்பங்களே வடக்கில் அறிமுகப்படுத்தி அதன்மூலம் அவற்றைப் பெருக்கி கடல்சார் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கென யாழ். மாவட்டமும், கிளிநொச்சியும் சிறந்த கடல்வாழ் உயிரினங்கள் வளர்ப்புக்கு [illegible] இடமாக இனங்காணப்பட்டுள்ளது. ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் வேலணையிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் வேரவில், கிராஞ்சி, போன்ற பகுதிகளிலும் இச் செயற்திட்டத்தின் முதற்கட்டப் பணிகளை ஆரம்பித்துள்ளனர். வடக்கிலுள்ள கடல் தொழில்நுட்பங்களில் முன்னேற்றம் இல்லை. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் அருகிப்போகின்றன. தற்போதுள்ள கடற்றொழிலாளர்கள் குறைந்த வருமானம் ஈட்டுகின்றனர்.

இவர்களின் இந்த உழைப்புக்குத் தொழில்நுட்பம் அவசியமாகின்றது.

இதற்கு கடற்றொழில் நீரியல்வளங்கல் அமைச்சும், தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் எமக்கு அனுசரணைகளை வழங்குகின்றன. இதற்கு அமைய இப்பகுதிகளில் வியட்னாம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இங்குள்ள கடல்வளங்களை உயர்த்துவதன் மூலம் கடற்றொழிலாளர்களின் வருமானங்களை ஈட்டமுடியும். இதற்கு யாருக்கும் கட்டுப்பாடு இல்லை. இத்தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்ள அனைவருக்கும் இடமுண்டு. இதன்மூலம் அனைவரும் பயனடைய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ.பா)

# சவுதி தீ விபத்தில் தமிழ் இளைஞன் பலி

சவுதி அரேபியாவில் ஏற்பட்ட தீ விபத்துச் சம்பவமொன்றில் கிழக்கு இலங்கையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். நிந்தவூரை அடுத்துள்ள அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த செல்வராசா ரமேஸ் (அர்ஜுன்) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவ்விளைஞன் கடந்த ஒன்றரை வருடங்களாக சவுதியில் பணிபுரிந்து வருவதாகவும் சம்பவதினம் வேலைமுடிவுற்று வந்த இளைஞன், தனது உணவை தயாரிப்பதற்காக சமையல் வேலைகளில் ஈடுபட்டிருந்ததாகவும் இதன்போது ஏற்பட்ட தீ விபத்தில் இவர் உயிரிழந்துள்ளதாகவும் அந்நாட்டு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## பூம்புகார்...

கிராமிய மின் வழங்கல் திட்டத்தின் அடிப்படையில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பூம்புகார் கிராமமானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நேரடி வழிகாட்டலில் மின்சார வசதியினை நேற்று முதல் பெற்றுக்கொண்டது.

காலை அங்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பூம்புகார் கிராம மக்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் உத்தியோகபூர்வமாக மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து அம்மக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது ஓர் ஆரம்பம் என்றும் மகிந்த சிந்தனையின் கீழான தேசிய வேலைத்திட்டத்தின் கீழான செயற்திட்டத்தில் ஏனைய அடிப்படை வசதிகளும் இக்கிராமத்திற்குப் பெற்றுத்தரப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமார், வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கோசல, யாழ். பிராந்திய மின் அத்தியட்சகர் ஞானகணேசன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச இணைப்பாளர் அம்பலம் இரவீந்திரதாசன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் பொதுமக்களும் பங்குகொண்டிருந்தனர்.

# இலங்கையரை நாடுதிரும்பக் கோரிக்கை மனிதாபிமான நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

பிரித்தானியாவில் சட்ட விரோதமான முறையில் தங்கியுள்ள இலங்கையர்களை சுயவிருப்பத்துடன் நாடு திரும்புமாறு, பிரித்தானியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஜோன் ரென்கின் கோரியுள்ளார்.

இதற்காக விசேட சுயாதீன வேலைத்திட்டம் ஒன்றை பிரித்தானிய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறு சுயாதீனமாக பிரித்தானியாவில் இருந்து வெளியேறுகின்ற சட்டவிரோத குடியேறிகளுக்கு, மீண்டும் பிரித்தானியாவுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுமா? என்ற கேள்விக்கு பதில் வழங்கும் வகையிலான உயர்ஸ்தானிகரின் காணொளி ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி அவ்வாறு சுயேட்சையாக பிரித்தானியாவில் இருந்து வெளியேறும் சட்டவிரோத குடியேறிகள் மீண்டும் பிரித்தானியாவுக்குள் பிரவேசிப்பதற்கு விதிக்கப்படுகின்ற தடையின் காலம் குறைக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## இரண்டுபட்டுள்ளது...

பித்துள்ளன. இதன் ஒரு அம்சமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரு வெவ்வேறு இடங்களில் இரண்டு மாவட்டத் தலைமைச் செயலகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது.

கூட்டமைப்பில் அங்கம் வகிககும் தமிழர் விடுதலைக் கூட்டணி கிளிநொச்சியில் ஏ-9 வீதியில் அலுவலகம் ஒன்றை அமைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாவட்டத் தலைமைச் செயலகம் என்று அதனை பிரகடனம் செய்துள்ளது.

அதேவேளை கிளிநொச்சி கணேசபுரத்தில் தமிழரசுக் கட்சி அலுவலகம் ஒன்றை அமைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவட்டத் தலைமைச் செயலகம் என்று அதனைப் பிரகடனம் செய்துள்ளது.

இதனால் இப்போது கிளிநொச்சியில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இரு பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் போட்டியும் குரோதமும் வளர்ந்து தலைவிரித்தாட ஆரம்பித்துள்ளது.

அதேவேளை பொதுமக்கள் குழப்பத்தில் உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான மாவட்டத் தலைமைச் செயலகம் எது என்பது பற்றி பொதுமக்கள் இன்னமும் தெளிவில்லாமல் உள்ளனர்.

மேலும் சில பொதுமக்கள் இவ்வாறான உட்கட்சி முரண்பாடுகளையும் ஏட்டிக்குப் போட்டியான நிலமையையும் வேடிக்கையுடன் பார்த்து இரசித்த வண்ணமுள்ளனர். (29)

## மக்களின்...

கருத்துக்களையும் பெறுவதற்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான முன்னேற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு இந்த மாதம் 21 ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் கூடவுள்ளது. இதன்போது, பொது மக்களின் வாய்மூல கருத்துக்களைச் சேகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக பொதுமக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் தங்களின் கருத்துக்களை எழுத்து மூலமாக சமர்ப்பிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணி...

இவர் நீண்டகாலமாக “ஹலோரஸ்ட்” கண்ணிவெடி அகற்றும் நிறுவன ஊழியராக கடமையாற்றுகின்றார். இவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. விசாரணைகள் மேற்கொளளப்பட்டதுடன் கொடிகாமம் பொலிஸார் மரணம் குறித்து விசாரணை செய்தனர். (இ,11)

# விமானப்படை விமானத்தில் பயணிக்க நவநீதம்பிள்ளை மறுத்துவிட்டார்

## தனியார் விமானத்தைப் பயன்படுத்த அரசு பூரண சம்மதம்

(கொழும்பு)

கொழும்புக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பயணத்துக்கு, தேவையான விமானத்தை ஒழுங்கு செய்து கொள்ளுமாறு அரசாங்கம் ஐ.நா. அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இம்மாதம் 25 ஆம் திகதி கொழும்பு வரும் நவநீதம்பிள்ளை, யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்குச் சென்று நிலைமைகளை பார்வையிடவுள்ளார்.

இந்தப் பயணங்களுக்கு, விமானப்படையினால் நடத்தப்படும், ஹெலிருவர்ஸ் விமானங்களைப் பயன்படுத்தும் படி, நவநீதம்பிள்ளையின் பயண ஒழுங்குகளைக் கவனிக்க அண்மையில் கொழும்பு வந்த ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் பணியகத்தின் தலைமைப் பாதுகாப்பு ஆலோசகர் ஆப்ரஹாம் மாத்தாயிடம், அரசாங்கம் வலியுறுத்தியிருந்தது.

எனினும் விமானப்படை விமானங்களில் பயணம் செய்வதற்கு நவநீதம்பிள்ளையின் பாதுகாப்பு அதிகாரிகள் விரும்பவில்லை. இதனால் இருதரப்புக்கும் இடையில் இழுபறி நிலை நீடித்துவந்தது.

அரசின் மேற்படி கோரிக்கை ஐ.நா.வுக்கு தெரியப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து இந்த இழுபறிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

## விக்டோரியா மகாராணியின் சிலை நூதனசாலையில் நிறுவ ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையிலிருந்து அகற்றப்பட்ட விக்டோரியா மகாராணியின் சிலையை நூதனசாலையில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பொதுநலவாய மாநாட்டை கருத்தில் கொண்டு அந்த சிலை தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் பிரித்தானியாவின் முன்னாள் மகாராணியின் சிலை ஜனாதிபதி மாளிகையிலிருந்து 1897 ஆம் ஆண்டு அப்புறப்படுத்தப்பட்டு கொழும்பு நூதனசாலையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது.


துரதிர்ஷ்டத்தை கொண்டு வந்தாக கூறியே இந்தச் சிலை ஜனாதிபதி மாளிகையிலிருந்து அகற்றப்பட்டது.

விகாரமாதேவி பூங்காவையும் பிரதான வீதியையும் நோக்கியவாறு இருக்கும் வகையிலேயே இந்த சிலையை நூதனசாலையில் நிறுவப்போவதாக நூதனசாலை அத்தியட்சகர் ரஞ்சித் ஹேவகே தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையிலுள்ள கெட்ட ஆவிகளை விரட்டுவதற்காக குறைந்தபட்சம் இரண்டு பேயோட்டிகளை கொண்டு சடங்குகளை செய்வித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான மூட நம்பிக்கை காரணமாகவே இலங்கை ஜனாதிபதிகளில் பலர் ஜனாதிபதி மாளிகையில் வாழவில்லை என்றும் கூறப்படுகின்றது.

## தமிழ் ஊடக இணைப்பாளர் நியமனக்கடிதம் பெறுகிறார்



(கொழும்பு)

ஜனாதிபதியினால் கடந்த வாரம் நியமிக்கப்பட்ட தமிழ் விவகாரங்கள் மற்றும் தமிழ் ஊடகங்களுக்கான ஜனாதிபதியின் இணைப்பாளரான ஊடகவியலாளர் ஆர்.சிவராஜா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடமிருந்து தனது நியமனக்கடிதத்தை பெற்றுக்கொண்டார்.

இவருக்கான நியமனக்கடிதம் அலரிமாளிகையில் வைத்து நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

வீரகேசரி பத்திரிகையில் செய்தியாளராக 1996 ஆம் ஆண்டு தனது ஊடகப்பணியை ஆரம்பித்த சிவராஜா, மகாராஜா நிறுவனத்தின் சக்தி தொலைக்காட்சி மற்றும் தினக்குரல் பத்திரிகை நிறுவனம் என்பனவற்றில் அரசியல் செய்தியாளராக பணிபுரிந்துள்ளார். அதன் பின்னர் சுடரொளி பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## யாழ்ப்பாணம் – கதிர்காமம் தினசரி அதிகாலை பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

கதிர்காமத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பேருந்து சேவை தினமும் அதிகாலையில் மட்டுமே இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கதிர்காம கந்த உற்சவம் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமான நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து அதிகாலை 5.45 மணிக்கு கதிர்காமம் நோக்கி ஒரு தனியார் பேருந்து சேவையே இடம்பெற்று வருவதாக வெளி மாவட்டங்களுக்கான தனியார் பேருந்துத்தரிப்பு நிலையக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

850 ரூபா வரையிலான பயணக்கட்டணத்துடன் தினமும் இச்சேவை இடம்பெறுவதாகவும், இதேபோல தினமும் காலை 6 மணிக்கு கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி இச்சேவை இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## முல்லையில் பக்திபூர்வமாக நடந்தேறியது இலட்சார்ச்சனை



(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தின் இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம் கடந்த 30 ஆம் திகதிஅன்று ஆரம்பமாகியது. தொடர்ச்சியாக நேற்று ஞானமூர்த்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து பாற்குட பவனி ஆரம்பமாகி அம்மன் ஆலயத்தையடைந்ததும் பாலபிஷேகம் அம்மனுக்கு நடைபெற்றது.

அடியார்களினால் பால், அறுகு ஆகியவை வைக்கப்பட்டு பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றதோடு ஆலயப் பிரதம குரு பிரம்ம ஸ்ரீ சிவகந்ததாசக் குருக்களினால் பூசைகளும் நடாத்தப்பட்டன. (40)

## பௌத்தபிக்கு வெட்டிக்கொலை

### குருநாகலில் சம்பவம்

(குருநாகல்)

79 வயது மதிக்கத்தக்க பிக்குவின் சடலமொன்று குருநாகலில் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. கலத்துட்டுவாகம பூரணரஜ மகா விகாரையின் பின்னாலிருந்தே இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கழுத்தில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாகத் தெரிவித்த குருநாகல் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தனர்.

## ஆஷஸ்

### நான்காவது தொடர்

முதல் நாள் ஆட்டம்

இங்கிலாந்து: 238/9

அவுஸ்ரேலியா: -

## மதுராநகர் கிராமத்திற்கு மின்சாரம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களில் இருந்து மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மதுராநகர் மக்களுக்கு சுமார் 8 வருடங்களின் பின்னர் கடந்த புதன்கிழமை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

சிறிடெலோ கட்சியின் செயலாளர்நாயகம் ப.உதயராசா மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியுடன் நடத்திய பேச்சுவார்த்தை மூலம் இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என மதுராநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில் மின்சாரமின்மை தொடர்பில் பல ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் சிறிடெலோ கட்சியின் முயற்சியால் மின்சாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மின்சாரம் வழங்கும் செயற்பாட்டை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன், சிறிடெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப. உதயராசா, கிளிநொச்சி பிராந்திய பிரதம மின் பொறியியலாளர் எஸ். பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (160)

### நீரில் மூழ்கி

## 2 குழந்தைகள் பரிதாப மரணம்

(ஹப்புத்தளை)

ஹப்புத்தளை, பிட்டரத்மலைப் பகுதியில் இரண்டு குழந்தைகள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளன.

ஒன்றரை மற்றும் இரண்டு வயது நிரம்பிய ஆண் குழந்தைகளே உயிரிழந்துள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

பிட்டரத்மலை தோட்ட மேல் பிரிவு மற்றும் கீழ் பிரிவுகளில் வீட்டுக்கு அருகில் இருந்த கிணறுகளில் விழுந்தே குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இச்சம்பவங்கள் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

பணியாளர் தேவை

கனடாவிலுள்ள ரேடியோ ஒன்றிற்கு யாழ்ப்பாணம் அல்லது கொழும்பில் இருந்து இயங்குவதற்கு இரண்டு ஒலிபரப்பாளர்களும், ஒரு ஆங்கிலத்தில் இருந்து தமிழிற்கு செய்தி தயாரிப்பவரும் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் உங்கள் சுய தரவுகளுடனான விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

விளம்பர இல. 02, மே.பா. தினமுரசு 373,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.